# 11th History – Volume 1 Study Material

1. வரலாற்றுக்கு முந்தைய காலத்துக்கான ஆய்வுக்கு உதவும் சான்றுகள் ?

- தொல்லியல் ஆய்விடங்கள், விலங்குகளின் எலும்புகள், எலும்புக் கருவிகள்
- நிலவியல் அடுக்குகள், பாறை ஓவியங்கள், கற்கருவிகள்.

2. பழைய கற்காலம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது ?

- கீழ் பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம், இடைப் பழங்கற்காலம்

3. ஹோமினின் குறித்து சிறு குறிப்பு வரைக

- தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தை கொண்ட மனித மூதாதையர் ஹோமினின்.
- ஆப்பிரிக்காவில் இவர்கள் வாழ்ந்த அடையாளங்கள் உள்ளன.
- இந்தியாவில் ஹத்னோராவில் ஹோமினின் புதை படிவம் கண்டுபிடிக்கப்பட்டது.

4. இடைக்கற்காலப் பண்பாடு

- இக்கால மக்கள் நெருப்பை பயன்படுத்தினர்.
- இறந்தோரை புதைத்தனர்.
- விலங்குகளை வேட்டையாடுதலும், உணவு சேகரித்தலும் நடைபெற்றது.

5. ஹரப்பா நாகரிகம் எவ்வாறு வெவ்வேறு கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது ?

- தொடக்ககால ஹரப்பா பொ.ஆ.மு 3000 – 2600
- முதிர்ச்சி அடைந்த ஹரப்பா பொ.ஆ.மு 2600 – 1900
- பிற்கால ஹரப்பா பொ.ஆ.மு 1900 – 1700

6. பெருங்குளம் சிறு குறிப்பு வரைக

- மொகஞ்சதாரோவில் பெருங்குளம் கண்டுபிடிக்கப்பட்டது.
- குளத்தின் நான்கு பக்கங்களிலும் நடைபாதைகள் உள்ளன
- நடைபாதையின் அருகே பல அறைகள் உண்டு

7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

- மெசபடோமியாவுடனான வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி
- தொடர் வறட்சி, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக் கொண்ட நிகழ்வு
- அந்நியர் படையெடுப்பு,

8. வேதகால இலக்கியங்களை வரிசைப்படுத்துக

- ரிக், யஜுர், சாம, அதர்வண ஆகியன வேதகால இலக்கியமாகும்.
- இவற்றில் பழமையானது ரிக் வேதம் ஆகும்
- வேதங்களுக்கு விளக்கவுரையாக பிரமாணங்கள் இயற்றப்பட்டன

9. ஜென்ட் அவெஸ்தா பற்றி எழுதுக

- ஜென்ட் அவெஸ்தா என்பது பாரசீக சௌராட்டிர மத நூலாகும்.
- இந்தியாவின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளை பற்றிய குறிப்புகள் இந்நூலில் உள்ளன.

- ஆரியர்களின் தொடக்ககால வாழிடங்கள் பற்றி அறிய உதவுகிறது

10. தொடக்க வேதகாலத்தில் பெண்கள் நிலை

- பெண்கள் கிராமக் கூட்டங்களில் கலந்துக் கொண்டனர்
- கிராமக் கூட்டங்களிலும், வேள்விகளிலும் பங்கெடுத்தனர்
- மறுமணம் புழக்கத்தில் இருந்தது

11. ரிக் வேத கடவுள்கள் குறித்து எழுதுக

- இந்திரனே மிக முக்கிய கடவுளாவார். அவர் புரந்தரா எனப்பட்டார்
- இருளை அகற்றும் கடவுள் சூரியன்.
- உஷா எனும் பெண் கடவுள் விடியலின் கடவுள் ஆவார்

12. இந்தியாவின் இரும்புக்காலம் குறித்து நீவிர் அறிவது யாது ?

- வட இந்தியாவின் இரும்புக் காலமானது ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டத்தோடு ஒத்துப் போகிறது.
- இம்மட்பாண்டங்கள் தொடக்க கால அரசியல் உருவாக்க காலத்தைச் சேர்ந்தவை.
- தென்னிந்தியாவில் இரும்புக் காலம் ஈமச்சின்னங்களுடன் கூடிய பெருங்கற்காலப் பண்பாடாக உள்ளது

13. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபீடங்கள்

- வினய பீடகம் துறவறம் குறித்த விதிகளை கூறுகிறது.
- சுத்த பீடகம் புத்தரின் போதனைகளை கூறுகிறது
- அபிதம்ம பீடகம் பௌத்த தத்துவம் பற்றி கூறுகிறது

14. சார்வாகம் குறித்த அறிந்ததை கூறுக

- இந்திய பொருள் முதல் வாத கோட்பாடு சார்வாகம் எனப்படுகிறது
- சார்வாகரும் அஜித கேசகம்பளியும் இதனை உருவாக்கினர்
- ஐயுறுவாதம் என்ற சிந்தனையை இவர்கள் மேம்படுத்தினர்

15. மகா வீரருடைய போதனைகளின் மையக்கருத்து அஹிம்சை ஆகும்

- மகாவீரருடைய போதனைகளின் மையக்கருத்து அஹிம்சை ஆகும்
- மகாவீரர் கடவுளின் இருப்பை மறுத்தார்
- உருவ வழிபாட்டையும், வேள்விகளையும் அவர் கண்டித்தார்.

16. ஜனபதங்களுக்கும், மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாடு ?

| | |
|---|---|
| கங்கைச் சமவெளியின் சிறுநாடுகள் ஜனபதங்கள் என்றழைக்கப்பட்டன | ஜனபதங்கள் மற்ற ஜனபதங்களை கைப்பற்றி மகாஜனபதங்களாக உருவெடுத்தன |
| ஜனபதங்கள் வளங்களுக்காகவும் அரசியல் மேலாதிக்கம் செலுத்தவும் தங்களுக்குள் சண்டையிட்டன | மகாஜனபதங்கள் மக்களை ஆட்சி செய்த பிரதேச முடியரசுகள் உருவானதை பிரதிபலித்தன |

17. தமிழ் நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டினத்தின் முக்கியத்துவம்

- இரண்டாம் நரசிம்மவர்மன் ஆட்சி காலத்தில் நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்த கோவில் கட்டப்பட்டது
- சீனத்துறவி வு கிங் இந்த பௌத்த மடத்திற்கு வருகை புரிந்தார்
- ஸ்ரீ விஜய அரசன் மாற விஜயோத்துங்கவர்மன் நாகப்பட்டினத்தில் சூளாமணி வர்ம விகாரத்தை கட்டினார்.

18. பிம்பிசாரர் எவ்வாறு மகதப் பேரரசை விரிவுபடுத்தினார் ?

- திருமண உறவுகள் மற்றும் போர்கள் மூலமாக மகதப் பேரரசை விரிவுபடுத்தினார்
- அவந்தி அரசோடு நட்புறவை பேணினார்
- அங்கத்தை ராணுவ பலத்தால் இணைத்துக் கொண்டார்

19. மகாபத்மநந்தர் பற்றி குறிப்பு வரைக

- நந்த வம்சத்தின் முதல் அரசர் ஆவார்
- சிசு நாக அரசரை கொன்று இவர் அரியணையை கைப்பற்றினார்
- நந்தர்களின் கீழ் பேரரசு நன்கு விரிவடைந்தது.

20. எதன் காரணமாக அலெக்சாண்டர் பேரரசின் அரியணையை திருப்பி தந்தார் ?

- ஹைடாஸ்பஸ் போரில் தோல்வியடைந்த போரஸ் சிறை பிடிக்கப்பட்டார்
- போரசின் கண்ணியத்தால் அலெக்சாண்டர் ஈர்க்கப்பட்டார்
- தனது மேலாண்மையை ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவரது அரியணையை திருப்பித் தந்தார்

21. மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கியப் பண்புகள்

- பேரரசு முழுவதும் ஒரே விதமான நிர்வாக அமைப்பு நிலவ வேண்டும்
- இம்முறையில் கிராமங்கள், நகரங்கள், மாகான தலைநகரங்கள் என்ற படிநிலைகள் காணப்படும்
- வருவாய் நிர்வாக அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும்

22. மௌரியப் பேரரசு பற்றி அறிய உதவும் இலக்கியச் சான்றுகள்

- மகாவம்சம், பிராமணங்கள்
- சந்திரகுப்த மௌரியர் அரியணை ஏறியதை கூறும் முத்ரராட்சசம்
- கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரம், மெகஸ்தனிஸ் எழுதிய இண்டிகா

23. அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்திய வரலாற்றில் திருப்பு முனை

- வடமேற்கு இந்தியாவில் பல கிரேக்க குடியிருப்புகள் உருவாயின
- இந்தியா கிரேக்கம் இடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது
- மேற்குலகிற்காக நான்கு வணிக பெருவழிகள் திறக்கப்பட்டன

24. பண்டமாற்று முறையை விளக்குக

- பொருள்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருள் அனைத்து இடங்களிலும் கிடைக்கவில்லை
- மூலப்பொருள்களுக்காக சிலர் விலை உயர்ந்த ஆபரணக் கற்களை பண்டமாற்றாக கொடுத்தனர்
- அம்மூலப் பொருட்கள் உற்பத்தி பொருளாக தயார் செய்யப்பட்டு வேறு பொருட்களுக்காக பண்டமாற்று செய்யப்பட்டன

25. மதுரைக் காஞ்சியிலிருந்து நீ அறிவது என்ன ?

- மதுரைக்காஞ்சி பகல் மற்றும் இரவு நேரக் கடைவீதிகளை (நாளங்காடி, அல்லங்காடி) பற்றி கூறுகிறது
- முது குடுமி பெருவழுதி, தலையாலங்காணத்து செரு வென்ற நெடுஞ்செழியன் போன்ற பாண்டிய மன்னர்களைப் பற்றி கூறுகிறது.
- இந்நூல் பாண்டிய மன்னர்கள் ஆட்சி காலத்தில் இயற்றப்பட்டது

26. யுவான் சுவாங் காஞ்சிபுரத்தில் கண்டது என்ன

- யுவான் சுவாங் காஞ்சிபுரத்தில் ஆயிரம் பௌத்த மடாலயங்களை கண்டதாக பதிவு செய்துள்ளார்.
- இம்மடாலயங்களில் மகாயான பௌத்தத்தைச் சேர்ந்த 10,000 குருமார்களை கண்டதாக குறிப்பிட்டுள்ளார்
- இவற்றை தனது சியூகி எனும் நூலில் பதிவு செய்துள்ளார்

27. ஆடு கோட்பாட்டு சேரலாதனை பற்றி நீ அறிந்தது என்ன ?

- சேரல் இரும்பொறையே ஆடுகோட்பாட்டு சேரலாதன் என அழைக்கப்படுகிறார்.
- நெடுஞ்சேரலாதனின் மகனான இவர் தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டார்
- இவரைப் பற்றி காக்கைப் பாடினியார் பதிற்றுப்பத்தின் ஆறாவது பத்தில் பாடியுள்ளார்

28. இந்தியாவை மத்திய தரைக்கடல் உலகத்தோடும் மத்திய ஆசியாவோடும் சீனாவோடும் இணைப்பதற்கு இட்டு சென்றது எது ?

- மௌரியப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மேற்காசியா, மத்திய ஆசியாவை சேர்ந்தவர்களின் தாக்குதலுக்கு உள்ளானது
- இப்படையெடுப்புகள் இந்திய பண்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தியது
- விரிவான வணிகத் தொடர்புகள் மூலம் மத்திய ஆசியா, சீனா போன்றவை இந்தியாவோடு ஒருங்கிணைந்தது

29. சந்திர குப்தருக்கும், செலியுகஸ் நிகேடருடன் இடையே நடைபெற்ற போரின் விளைவு என்ன ?

- சந்திர குப்தர் செலியுகஸ் நிகேடருடன் அமைதி உடன்படிக்கையை செய்து கொண்டார்
- சந்திர குப்தர் செலியுகசுக்கு 500 போர் யானைகளை வழங்கினார்
- கிரேக்க நாட்டு துாதராக மெகஸ்தனிஸ் மௌரிய தலைநகருக்கு அனுப்பப்பட்டார்

30. யவன என்ற சொல்லுக்குப் பொருள் என்ன ?

- இந்தியாவில் கிரேக்கர்களை குறிக்க யவன எனும் சொல் பயன்பட்டது
- இச்சொல் பாரசீக சொல்லான யயுனா எனும் சொல்லிலிருந்து பெறப்பட்டது
- இந்தியாவில் பொனீசியர்களும் யவன எனும் சொல்லிலே குறிப்பிடப்பட்டனர்.

31. சத்ரப்புகள் பற்றி நீவிர் அறிவது யாது ?

- சாகர்கள் ஆட்சியில் மாகாண ஆளுநர்கள் சத்ரப்புகள் எனப்பட்டனர்
- சத்ரப்புகள் நடைமுறையில் சுதந்திர ஆட்சியாளர்களாயினர்
- சாக சத்ரப்புகளில் மிகவும் புகழ் பெற்றவர் முதலாம் ருத்ரதாமன் ஆவார்

32. நாட்டின் வடமேற்கில் ஒரு பெரிய அரசை மினான்டர் ஆட்சி செய்ததாக கூறப்படுகிறது விவரிக்கவும்

- இந்தோ கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் மினான்டர் ஆவார்
- தஞ்சைப் பகுதியை ஆளுகைப்படி அவர் கலிங்க மன்னர் காரவேலனை முறியடித்தார்

- அவரது நாணயங்கள் காபூல் சிந்து சமவெளி மேற்கு உத்திரப்பிரதேசம் பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன

33.

- இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் :
  மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டுத் துணி விளாமிச்சை வேர் தைலம் , தாளிச பத்திரி, நீலக்கல், கோமேதகம், வைரம் , ஆமை ஓடு
- ரோமிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் :
  நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சனம், பவழம், தாமிரம், தகரம், கச்சா கண்ணாடி ஈயம் மது வகைகள்,

34. பெருகி வரும் வணிகத்திற்கும், வியாபாரத்துக்குமான வணிகர்களின் பங்களிப்பு யாது ?

- வணிகர்கள் எண்ணிக்கையில் பெருகி முக்கியமானோர் ஆயினர்
- வெளிநாடுகளோடு தரை வழியாகவும், கடல் வழியாகவும் வாணிபத்தில் ஈடுபட்டனர்
- பெருநகரங்களின் அங்காடிகளில் குறிப்பிட்டப் பொருள்களை மட்டுமே விற்கும் வணிகர்கள் இருந்தனர்.

35. ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியல் ?

- 1. ஸ்ரீகுப்தர் [240-280] 2. கடோத்கஜர் [280-319]
- 3. சந்திரகுப்தர் – 1 [319-335] 4. சமுத்திரகுப்தர் [335- 375]
- 5. சந்திரகுப்தர் -2 [375- 415] 6. குமாரகுப்தர் -1 [415- 455]
- 7. ஸ்கந்த குப்தர் [455- 467]

36 ஹீனர் குறித்து என்ன அறிவீர்

- காஸ்பியன் கடல் அருகில் வாழ்ந்த பழங்குடி இன குழுக்கள் : - டாசிடஸ்.
- ரோமபுரி பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்கள்
- ஐரோப்பாவில் கொடுங்கோண்மைக்குப் பெயர் பெற்றவர்கள்

37. மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுவது யாது ?

- மதுராவில் மக்கள் தொகை அதிகம்
- மக்கள் மிக மகிழ்ச்சியாக இருந்தனர்
- மக்கள் எந்த உயிரையும் கொல்லவில்லை, மதுபானம் அருந்தவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

38. பௌத்த அறிஞர்களையும் அவர்களது படைப்புகளையும் எழுதுக ?

- தர்க்க அறிவியல் சார்ந்த பௌத்த நூலை வசுபந்து இயற்றினார்
- வசுபந்துவின் சீடரான திங்கநாகரும் பல அரிய நூல்களை படைத்தார்
- ஆர்யதேவர், ஆர்ய அசங்கர் போன்றோரும் சிறந்த அறிஞர்களாவர்

39. அலகாபாத் பாறை கல்வெட்டு பற்றி கூறுக ?

- சமுத்திர குப்தரின் ஆளுமை மற்றும் சாதனைகளை விளக்குகிறது
- இக்கல் வெட்டை பொறித்தவர் ஹரி சேனர் ஆவார்
- 33 வரிகளில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது

40. ஹர்ஷர் போாசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள் யாவை?

- மதுபனி செப்புப் பட்டயக் குறிப்புகள்
- சோன்பட்டு செப்பு முத்திரைக் குறிப்புகள்
- பன்ஸ்கெரா செப்பு பட்டயக் குறிப்புகள்
- நாளந்தா களிமண் முத்திரைகக் குறிப்புகள்.

**41.** ஹர்ஷர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார் ?

- கன்னோசி அமைச்சர் போனியின் அறிவுரையின் படி ஹர்ஷர் அரியணையில் அமர அழைக்கப்பட்டார்
- தயக்கம் காட்டிய ஹர்ஷருக்கு போதிசத்துவரான அவலோகிதேஷ்வர் ஆலோசனை வழங்கினார்
- அதன்படி ராஜ்புத்திரர், சிலாதித்யா பட்டங்களுடன் ஹர்ஷர் அரியணை ஏறினார்.

**42.** முதலாம் மகிபாலரின் சிறப்புகள் யாது ?

- மகிபாலர் ஆட்சிகாலத்தில் இராசேந்திர சோழன் வட இந்தியாவிற்கு படையெடுத்துச் சென்றார்.
- இராசேந்திர சோழன் கங்கை நதியை கடக்க முடியாத படி தடுத்தார்
- மஹிபாலரால் பாலர் வம்சத்தின் பெயர் ஓரளவு மீட்டெடுக்கப்பட்டது

**43.** தக்கோலப் போரின் முக்கியத்துவம் யாது ?

- இராட்டிரக்கூட அரசர் மூன்றாம் கிருஷ்ணருக்கும், சோழருக்கும் இடையே போர் நடைபெற்றது.
- பொ.ஆ, 949 ல் நடைபெற்ற இப்போரில் ராஜாதித்ய சோழன் தோற்கடிக்கப்பட்டார்.
- மூன்றாம் கிருஷ்ணர் தெற்கே இராமேஸ்வரம் வரை சென்று வெற்றித் தூணை நிறுவினார்

**44.** பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக் கழகத்தின் முக்கியத்துவம்

- பௌத்த மதக் கொள்கையை போதிக்கும் முக்கிய மையமாக விளங்கியது
- இந்தியாவின் கிழக்குப் பகுதியில் பௌத்த மதம் புகழ்பெற உதவியது
- பௌத்த , சமண, சமஸ்கிருத இலக்கியங்கள் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியது.

**45.** திருப்புறம்பியம் போரை பற்றி நீ அறிந்தது என்ன ?

- பல்லவருக்கும் பாண்டியருக்கும் இடையே இப்போர் நடைபெற்றது
- மேலைகங்கரும், சோழர்களும் இப்போரில் பல்லவருக்கு உதவினர்
- பாண்டிய மன்னர் இரண்டாம் வரகுணன் இப்போரில் தோல்வியுற்றார்.

**46.** ஐஹோல் கல்வெட்டு குறித்து சிறுகுறிப்பு வரைக

- இக்கல்வெட்டை வெளியிட்டவர் ரவிகீர்த்தி என்ற அறிஞர்
- சமஸ்கிருத மொழியில் 19 வரிகளில் இக்கல்வெட்டு காணப்படுகிறது
- சாளுக்ய மன்னன் இரண்டாம் புலிகேசியின் சாதனைகளைப் பற்றிய செய்திகள் இதில் காணப்படுகின்றன.

**47.** சாளுக்கியர் காலத்தில் கன்னடத்தில் எழுதப்பட்ட இரண்டு முக்கியமான இலக்கியங்களை குறிப்பிடுக

- கவிராஜமார்க்கம், பம்ப பாரதம், விக்கிரமார்ஜுன விஜயம்

**48.** அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜர்

- வைணவ சமயத்தில் பிராமணர் அல்லாதோரை இணைத்துக் கொண்டார்
- வர்ணாசிரம கோட்பாட்டிற்கு வெளியே இருந்தவர்களிடமும் அவர் பக்தி கோட்பாட்டை பரப்பினார்
- ராமானுஜரின் விசிஷ்டாத்வைத கோட்பாடு செல்வாக்குடன் தனிமுறையாக வளர்ச்சி பெற்றது

**49.** கஜினியின் அரசராக மாமூது பதவி ஏற்றல்

- தனது சகோதரன் இஸ்மாயிலை தோற்கடித்து கஜினியின் அரசரானார்
- மாமூது பதவியேற்றதை காலிபா அங்கீகரித்தார்
- யாமினி உத் தௌலா என்ற பட்டமும் மாமூதுக்கு வழங்கப்பட்டது

**51.** கஜினி மாமூது ஆதரித்த அறிஞர்கள்

- பிர்தௌசி, உத்பி, அல்பெருணி, அன்சாரி.

**52.** துருக்கிய படையெடுப்பின் போது வட இந்தியாவில் இருந்த ராஜபுத்திர வம்சாவளிகள்

| ராஜபுத்திர வம்சாவளிகள் | வசித்த பகுதி |
|---|---|
| டோமர்கள் | டெல்லி |
| சௌகான்கள் | ராஜஸ்தான் |
| சோலங்கி | குஜராத் |
| பரமர்கள் | மால்வா |
| கடவாலா | கன்னோசி |
| சந்தேலர் | பந்தேல்கந்த் |

**53.** நாற்பதின்மர் அமைப்பு

- நாற்பதின்மர் அமைப்பை உருவாக்கியவர் இல்துத் மிஷ் ஆவார்
- இல்துத்மிஷ் இறந்த பிறகு நாற்பதின்மர் குழு வலிமையாக மாறியது
- நாற்பதின்மர் அமைப்பை பால்பன் ஒழித்தார்

**54.** இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக்கருவிகள்

- ரபாப், ஸாரங்கி போன்ற இசைக்கருவிகளை அறிமுகப்படுத்தினர்

**55.** சோழர் காலத்து இலக்கிய வடிவ வரலாற்று நூல்கள் ?

- ஜெயங்கொண்டார் எழுதிய கம்பராமாயணம்
- ஒட்டக்கூத்தர் எழுதிய குலோத்துங்கச் சோழன் பிள்ளைத் தமிழ் மற்றும் மூவருலா

**56.** சோழ மண்டலம் மும்முடி சோழமண்டலம் என அழைக்கப்பட்டது ஏன்

- சோழர்கள் தாங்கள் கைப்பற்றிய பகுதிகளை ஒன்றினைத்து மண்டலங்களாக உருவாக்கினர்
- பாண்டிய நாட்டில் சோழ பாண்டியர், இலங்கையில் சோழ இலங்கேஸ்வரர் என்ற மண்டலங்கள் உருவாக்கப்பட்டன.
- பின்னர் இது மும்முடி சோழ மண்டலம் என்றழைக்கப்பட்டது

**57.** முதலாம் இராசேந்திரனுக்கான பட்டங்கள் எவை

- முடி கொண்ட சோழன், கங்கை கொண்டான்
- கடாரம் கொண்டான், பண்டித சோழன்

**58.** நிலத்தை கணக்கிடுவதற்கான பல்வேறு அலகுகள்

- குழி, மா, வெளி, பட்டி, படாகம் .

**59.** சோழர் காலத்து கால்வாய்களில் அரசர்கள், அரசிகள், கடவுளின் பெயர்கள் சூட்டப்பட்ட கால்வாய்கள் யாவை ?

- உத்தமச் சோழன் வாய்க்கால், பஞ்சவன் மாதேவி வாய்க்கால்
- கணவதி வாய்க்கால்

60. தமிழ்ச் சங்கம் குறித்து எழுதுக

- இறையனார் அகப்பொருளில் சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் இடம் பெற்றுள்ளது
- திருவிளையாடல் புராணம், பெரிய புராணம் போன்ற நூல்களில் சங்கம் என்ற சொல் கலைக் கழகம் என்ற பொருளில் உள்ளது
- சங்க காலத்தில் தென்மதுரை கபாடபுரம் மதுரை போன்ற இடங்களில் தமிழ்ச்சங்கம் நடைபெற்றுள்ளது

61. பாண்டிய அரசின் மீதான மாலிக் கபூரின் படையெடுப்பின் விளைவுகள்

- பாண்டிய நாடு அரச குடும்ப உறுப்பினர்களால் தனித்தனியாக பிரித்து கொள்ளப்பட்டது
- மதுரையில் தில்லி சுல்தானியம் நிறுவப்பட்டது.
- சொக்கநாதர் கோவில் இடிக்கப்பட்டு விலை மதிக்க முடியாத பொருள்கள் மாலிக்கபூரால் எடுத்து செல்லப்பட்டன.

3 மதிப்பெண் விடைகள்

1. அச்சூலியன், சோஹானியப் பண்பாடுகளின் கருவி செயல்பாடுகள்

<u>அச்சூலியன் மரபு</u>

- கைக்கோடாரி வகைக் கருவிகளைக் கொண்ட மரபு அச்சூலியன் மரபு என்று அழைக்கப்படுகிறது..
- அச்சூலியன் மரபு பெருமளவில் கோடாரிகளையும், வெட்டுக்கத்திகளையும் கொண்டது.

<u>சோகானியன் மரபு</u>

- கூழாங்கல்லை செதுக்கி உருவாக்கப்பட்ட கருவிகளைக் கொண்ட மரபு சோகானியன் மரபு என்று அழைக்கப்படுகிறது.
- சோகானிய மரபு துண்டாக்கும் கருவிகளையும் அதைச் சார்ந்த வேலைகளுக்கான கருவிகளாகும்.

2. இந்தியாவின் இடைப்பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகள்

- கருவிகள் சியதாயின.
- கோடாரியை பயன்படுத்தும் வழக்கம் குறைந்தது..
- கற்கருவிகள் உற்பத்தியில் மூலக்கல்லை தயார் செய்யும் தொழில் நுட்பத்தை பயன்படுத்தினர்.
- வேட்டையாடுபவர்களாகவும், உணவை சேகரிப்போராகவும் இருந்தனர்.

3. இடைக்கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்கப் பண்புகள்

- ஓரளவு நிரந்தர மற்றும் தற்காலிக குடியிருப்புகளில் வசித்தனர்.
- குகைகளிலும், திறந்த வெளிகளிலும் வசித்தனர்.
- இறந்தோரை புதைத்தனர்.
- பிம்பிட்கா போன்ற இடங்களில் அவர்கள் கலைத்திறனை காணலாம்.

4. இடைக்கற்கால நாகரீகம் நிலவிய இடங்கள்

| | |
|---|---|
| பிகார் | பயிஸ்ரா |
| குஜராத் | லங்னஜ் |

| | |
|---|---|
| உத்திரப்பிரதேசம் | சோபனி மண்டோ, சராய் நகர் ராஜ் , தம்தமா, மகாதகா. |
| கர்நாடகம் | சனகனகல்லு, கிப்பனஹள்ளி |

5. சிந்து நாகரீகம் நிலவிய பகுதிகளின் எல்லைகளை குறிப்பிடுக

| | |
|---|---|
| மேற்கு | சட்காஜெண்டோர் – பாகிஸ்தான், ஈரான் எல்லையில் அமைந்துள்ளது |
| வடக்கு | ஷார்ட்டுகை (ஆப்கானிஸ்தான்) |
| கிழக்கு | ஆலம்கிர்புர் (உத்திரப்பிரதேசம்) |
| தெற்கு | தைமாபாத் (மகாராஷ்டிரம்) |

6. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு குறித்து எழுதுக

- மணிகள், அணிகலன் செய்தல், சங்கு வளையல் செய்தல், உலோக வேலைகள் ஆகியன கைவினை செயல்பாடுகளாகும்.
- ஜாஸ்பர், கிரிஸ்டல், செம்பு, வெண்கலம், சங்கு, சுடுமண் ஆகியவற்றிலும் அணிகலன் செய்தார்கள்.
- அணிகலன்கள் எண்ணற்ற வடிவமைப்பிலும், வேலைப்பாடுகளுடனும் செய்யப்பட்டன.
- ஹரப்பாவில் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருட்கள் மெசபடோமியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

7. ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள்

- சிந்து மக்கள் இயற்கையை வழிபட்டார்கள்.
- அரச மரங்கள் வழிபாட்டுக்குறியதாக இருந்திருக்கலாம் என கருதப்படுகிறது.
- தாய் தெய்வத்தைப் போன்று சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன.
- இறந்தோரை புதைத்ததற்கும், எரித்ததற்கும் சான்றுகள் கிடைத்துள்ளன.

8. தென் இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடுகளை எழுதுக.

- ஒரு முழுமை பெற்ற செம்புக் கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் நிலவியதற்கான சான்றுகள் இல்லை.
- துளையிட்ட பாண்டங்களும், கொண்டி வடிவிலான பாண்டங்களும் கிடைத்துள்ளன.
- கல்லினால் ஆன கருவிகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டன.
- வேளாண்மை, கால்நடைவளர்ப்பு ஆகியன மக்களின் வாழ்வாதாரமாக இருந்தது.

9. தொடக்ககால வேதகாலத்தின் புவியியல் பரவல்கள்.

- இந்திய துணைக் கண்டத்தில், தொடக்க வேதகால ஆரியர்கள் கிழக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பஞ்சாப், மேற்கு உத்திரப் பிரதேசத்தின் சில பகுதிகளில் வாழ்ந்தனர்.
- இக்காலக் கட்டத்தில் ஆரியர்கள் பெரும்பாலும் சிந்து பகுதிகளிலேயே வாழ்ந்து வந்தனர்.

10. ரிக் வேத கால சமூகப் பிரிவுகள்.

- தாசர்களும், தசயுக்களும் அடிமைகளாக கருதப்பட்டனர். பின்னர் இவர்கள் சூத்திரர்காளக கருதப்பட்டனர்.
- சமூகத்தில் போர்புரிபவர்கள், மத குருமார்கள், சாதாரண மக்கள் எனும் பிரிவுகள் தோன்றின.
- ரிக் வேத காலத்தின் இறுதிப் பகுதியில் சூத்திரர் என்போர் தனிப்பட்ட பிரிவினராயினர்.
- தொழில் அடிப்படையில் கால்நடை வளர்ப்போர், வேளாண்மை செய்வோர், சிகை அலங்காரம் செய்வோரும் குறிப்பிடப்படுகின்றனர்.

11. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகள்

- கால்நடை மேய்ச்சல் வாழ்க்கை முறையில் முக்கிய இடத்தை பெற்றது.
- கால்நடைகளை மையப்படுத்திய மோதல்கள் அன்றாடம் நிகழ்ந்தன.
- கால்நடை மேய்ச்சலுக்கு அடுத்த நிலையில் வேளாண்மை இருந்தது.
- சமூகம் இனக் குழுக்களையும், மரபு வழி குடும்பங்களையும் கொண்டிருந்தன.

12. தொடக்க வேதகால சமூகம், பிந்தைய வேதகால சமூகம் ஒப்பிடுக

| தொடக்க வேத கால சமூகம் | பிந்தைய வேதகால சமூகம் |
|---|---|
| தொடக்க காலத்தில் சமூகம் சமத்துவத் தன்மை கொண்டதாக இருந்தது | நால்வர்ண முறை ஆழமாக வேர்கொண்டு காலப் போக்கில் மேலும் இறுகியது |
| ரிக் வேத காலத்தின் இறுதியில் சூத்திரர் தனிப்பட்ட பிரிவினராயினர் | சூத்திரர்களுக்கும் கீழாக சில சமூக குழுக்கள் வைக்கப்பட்டன |
| பெண்கள் சமுதாயத்தில் மதிக்கப்பட்டனர் கிராமக் கூட்டங்களிலும் வேள்விகளிலும் பங்கு பெற்றனர் | பெண் குழந்தைகள் பிரச்சினையின் தோற்றுவாயாக கருதப்பட்டனர் |

13. காட்டை திருத்தியதில் இரும்பின் பங்கு

- காடுகளை திருத்துவதில் இரும்பு முக்கியப் பங்காற்றியது.
- கங்கைச் சமவெளியின் வளம் செறிந்த மண்ணும், இரும்புக் கொழுமுனைகளின் பயன்பாடும் வேளாண் உற்பத்தியை மேம்படுத்தின.
- பாசன வசதிகளுடன் இரும்புக் கோடாரிகளும், இரும்பு கலப்பைகளும் வேளாண் உற்பத்தியை அதிகரித்தன.
- கங்கை வடிநீர் பகுதியில் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைய இரும்புக் கோடாரிகளும், இரும்பு கலப்பைகளுமே காரணம் என்று ஆர்.எஸ். சர்மா குறிப்பிட்டுள்ளார்.

14. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்திற்கான காரணம்

- வேளாண் உபரி.
- கைத்தொழில்.
- வணிக வளர்ச்சி.
- மக்கள் தொகை பெருக்கம் – இந்திய வரலாற்றில் இது இரண்டாவது நகரமயமாக்கமாகும்.

15. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு வளர்ச்சிப் பெற்ற நகரங்கள்

- <u>அரசியல், நிர்வாக மைய நகரங்கள் :</u> ராஜகிருகம், சிராவஸ்தி, கௌசாம்பி, சம்பா
- <u>வணிக மைய நகரங்கள் :</u> உஜ்ஜெய்னி, தட்ச சீலம்
- <u>புனிதத் தலை நகரம் :</u> வைசாலி

16. பொ. ஆ.மு. 5, 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அவைதீக சிந்தனையாளர்

- கோசலர், கௌதம புத்தர், மகாவீரர், அஜித கேசகம்பளி.
- புராண கசபர், பகுத கச்சாயனர், நந்தவாச்சா.

17. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கு

- மதுரை மற்றும் சுற்றியுள்ள பிற இடங்களில் சமண துறவிகளின் கற்படுக்கைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

- நாலடியார், பழமொழி, சீவக சிந்தாமணி, யாப்பெருங்கலக்காரிகை, நீலகேசி சமண நூல்கள் இயற்றப்பட்டன.
- வஜ்ரநந்தி என்பவர் மதுரையில் திராவிட சமண சங்கத்தை நிறுவினார்.
- காஞ்சிபுரத்திற்கு அருகே திருப்பருத்திக் குன்றத்தில் ஒரு அழகான சமணக் கோவில் கட்டப்பட்டது.

18. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரிய வரும் நகரப் பண்புகள்

- தொல்லியல் அகழ்வாய்வுகள் மூலம் நகரத்தின் அமைப்பு, கட்டுமானம் ஆகியவற்றை தெரிந்து கொள்ள முடிகிறது.
- அக்கால மக்கள் பயன்படுத்திய உலோகங்கள், கருவிகள், அவர்கள் கையாண்ட தொழில் நுட்பம் ஆகியன கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- இவற்றின் மூலம் அம்மக்களின் அன்றாட வாழ்வியல் பண்பாடு பற்றி அறிய முடிகிறது.
- கங்கைப் பகுதியில் உருவான நகர மையங்களின் தன்மை குறித்த நம்பகமான சான்றுகளை தந்துள்ளன.

19. கங்கைச் சமவெளியின் முடியாட்சியின் அம்சங்கள்

- சிறு நாடுகளும், இனக்குழுக்களின் கூட்டமைப்புகளும் போர் மூலம் வெல்லப்பட்டு இணைக்கப்பட்டன.
- போர்கள் மூலம் வெல்லப்பட்ட பகுதிகள் பேரரசு உருவாக வழிவகுத்தன.
- அரசுகள் சக்கரவர்த்தி அல்லது ஏக்ராட் என்ற உயர்ந்த அரச பதவிகளால் ஆட்சி செய்யப்பட்டன.
- இவை பதினாறு மகாஜன பதங்கள் உருவாக வழிவகுத்ததுடன் மகதத்தின் எழுச்சிக்கும் வித்திட்டது.

20. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கம்

- மேற்குலகிற்காக வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.
- கிரேக்க வணிகர்களும், கைவினைஞர்களும் இந்தியா வந்தனர்.
- இந்தியாவுக்கும், கிரேக்கத்திற்கும் இடையே நேரடி தொடர்பு ஏற்பட்டது.
- இந்தியாவின் வடமேற்கில் பல கிரேக்க குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.

21. அசோகர் கலிங்கம் மீது படையெடுத்தது பற்றி நாம் அறிவது

- அசோகர் ஆட்சிக் காலத்தின் எட்டாவது ஆண்டில் கலிங்கப்போர் நடைபெற்றது.
- மௌரியர்கள் அதிகாரப்பூர்வமாக பதிவ செய்த படையெடுப்பு ஆகும்.
- போரில் கொல்லப்பட்டவர்கள், படுகாயமடைந்தவர்கள் எண்ணிக்கை பல பத்தாயிரங்களாகும்.
- போரின் துன்பங்களால் நெகிழ்ந்த அசோகர் பௌத்த மதத்திற்கு மாறினார்.

22. இந்தியா மற்றும் மேற்கு, மத்திய ஆசியா இடையில் வாணிபம் செய்யப்பட்ட பொருட்கள்

- இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், சீனா, இலங்கை போன்ற இடங்களிலிருந்தும் வந்த துணிகள், கம்பளி, பட்டு, வாசைன மரக்கட்டை, அவுரி, தந்தம், ஆமை ஓடு, வாசைன திரவியங்கள், அபூர்வ மரக்கட்டை, விலங்குகளின் தோல், நவரத்தின கற்கள் பற்றி அர்த்த சாஸ்திரம் குறிப்பிடுகிறது.

22. மௌரியர் காலத்தில் பரந்த அளவில் நடைபெற்ற ஆடை வணிகம்

- நாடெங்கிலும் கிடைத்த பருத்தியை நம்பி பருத்தி ஆடைகளுக்கான நூற்பு மற்றும் நெசவுத் தொழில் நடைபெற்றன.
- முரட்டு ரகம் முதல் மெல்லிய ரகம் வரை பருத்தி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.
- காசி, வங்கம், காமரூபம், மதுரை மற்றும் பல இடங்களில் சிறப்பான துணிகள் உற்பத்தி செய்யப்பட்ட தாக அர்த்த சாஸ்திரம் கூறுகிறது.
- சீனப்பட்டு குறித்தும் மக்கள் அறிந்திருந்தனர்.

23. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்

| திணை | சார்ந்த நிலம் | தொழில் |
|---|---|---|
| குறிஞ்சி | மலையும் மலை சார்ந்த பகுதி | வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் |
| முல்லை | காடும் காடு சார்ந்த இடம் | வேளாண் தொழில் , கால்நடை மேய்த்தல் |
| மருதம் | வயலும் வயல் சார்ந்த இடம் | வேளாண் தொழில். |
| நெய்தல் | கடலும் கடல் சார்ந்த இடம் | மீன் பிடித்ததல், உப்பு தொழில் |
| பாலை | மணலும் மணல் சார்ந்த இடம் | கால்நடை திருட்டு, கொள்ளையடித்தல் |

24. சோழ அரசர்களில் தலை சிறந்தவன் கரிகாலன்

- இளஞ்சேட் சென்னியின் மகனான கரிகாலனுடைய ஆட்சியைப் பற்றி பட்டினப்பாலை விவரிக்கிறது.
- வெண்ணி போர் களத்தில் சேர, பாண்டியர் மற்றும் பதினோறு வேளிர்களை முறிபடித்தான்.
- காட்டை வெட்டி நாடாக்கியதுடன் காவிரியில் கல்லணையை கட்டினான்.
- குளம், வாய்க்கால் போன்ற நீர்பாசன வசதியை ஏற்படுத்தி வேளாண்மையை வளரச் செய்தார்.

25. கௌதமிபுத்திர சதகர்னியின் சாதனைகள்

- சாக அரசர் நாகபாணரை முறியடித்தார்.
- நாக பாணாவின் நாணயங்களை தன் அரச முத்திரையோடு மீண்டும் வெளியிட்டார்.
- சாகர், பகல்வர், யவனர் ஆகியோரை முறியடித்ததை அவரது தாயார் வெளியிட்ட நாசிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- பெருமைக்குரிய அஸ்வமேத யாகத்தை செய்தார்.

26. கிழார் வேளிர் இருவருக்குமுள்ள வேறுவாடுகள்

| கிழார் | வேளிர் |
|---|---|
| கிராமங்களின் அல்லது ஒரு சிறிய பகுதியின் தலைவராக இருந்தனர். | மலைப் பாங்கான காட்டுப்பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தனர் |
| குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடி சமூகங்களின் தலைவர்கள் ஆவர் | படை வலிமை பெற்றிருந்த இவர்களுக்கிடையே ஆநிரை கவர்தல் தொடர்பாக அடிக்கடி மோதல்கள் நடைபெற்றன. |
| எண்ணிக்கையில் குறைந்த அளவில் இருந்தனர் | எண்ணிக்கையில் அதிக அளவில் இருந்தனர் |

27. டெமட்ரியசின் நாணயங்களின் சிறப்புகள்

- டெமட்ரியஸ் இந்தியாவோடு கொண்டிருந்த தொடர்புகளை அவரது நாணயங்கள் வெளிப்படுத்துகின்றன.
- சதுர வடிவிலான இரு மொழி நாணயங்களை அவர் வெளியிட்டார்.
- இந்த நாணயத்தின் முகப்பு பக்கத்தில் கிரேக்கத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.
- பின் பக்கத்தில் கரோஷ்டி வடிவத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

**28.** மினாண்டர் குறித்து நீங்கள் அறிவது

- இந்தோ கிரேக்க அரசர்களில் மினாண்டர் நன்கறியப்பட்டவர் ஆவார்.
- பாஞ்சாலம், மதுரா அரசர்களோடு சேர்ந்து கங்கை பகுதியை சூறையாடினார்.
- பாடாலிபுத்திரத்தை அவர் வெற்றிகரமாக தாக்கினார்.
- நாகசேனருடன் பௌத்தம் குறித்து விவாதத்தில் ஈடுபட்ட அவர் பௌத்தமதத்திற்கு மாறினார்.

**29.** முற்பட்ட கால ரோமானிய நாணயங்கள் கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிகம் கிடைக்கின்றன. ஏன்

- மேற்கு கரையிலிருந்த துறைமுகங்கள் ரோமுடன் வாணிபத்தில் அதிகளவில் ஈடுபட்டன.
- மேற்கு கரையிலிருந்து ரோமானிய வணிகர்கள் பாலக்கட்டு கனவாய் வழியாக வந்தனர்.
- கொடுமணல், படியூர், வாணியம்பாடி ஆகிய இடங்களில் ரோம் நாட்டிற்கு தேவையான கோமேதக சுரங்கங்கள் இருந்தன.
- சென்னிமலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்பும் , எஃகும் ரோமபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
- இதனால்தான் முற்காலத்திய ரோமானிய நாணயங்கள், கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் அதிகமாக கிடைக்கின்றன.

**30.** இரண்டு வணிக சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது எவ்வாறு.

- மேற்கு கடற்கரையில் இருந்த துறைமுகங்களில் மிகவும் பரபரப்பான வணிக மையம் முசிறியாகும்.
- நாட்டின் உள்பகுதியிலிருந்து அரிசியை ஏற்றி வந்த படகுகள் திரும்பி செல்கையில் மீன்களை ஏற்றிச் சென்றன.
- இது அடிப்படையான நுகர்வுப் பொருட்களின் வணிகத்தில் பண்டமாற்று முறை பின்பற்றப்பட்டதை சுட்டுகிறது.
- சந்தைக்கு கொண்டு வரப்பட்ட கருமிளகு மூட்டைகள், கப்பலில் வந்த தங்கத்திற்கு பண்டமாற்றம் செய்து கொள்ளப்பட்டன.

**31.** பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவம்.

- தரைவழி, கடல்வழி வணிகத்தின் அதிகரிப்பும், நகர அங்காடிகள் குறித்த இலக்கியக் குறிப்புகளும் பணம் தான் பரிமாற்றத்துக்கான முக்கிய ஊடகம் என்பதை உணர்த்துகின்றன.
- இக்கருத்தை நிரூபிக்கும் வகையில் பல்வேறு மையங்களில் ரோமாணிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- அமராவதி ஆற்றுப்படுகையில் பெரிய அளவுகளில் சேர நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- வட இந்தியாவிலும் அதிகமான இந்தோ கிரேக்க, குஷான நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**32.** கிரேக்கருடனான இந்திய தொடர்பின் விளைவான பண்பாட்டு தாக்கத்தின் சிறப்புகள்

- கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம் பாடாலிபுத்திரத்திலுள்ள நினைவுச் சின்னங்களிலிருந்து தெரியவருகிறது.
- மௌரியர்களின் நிர்வாக அமைப்புக்கு பாரசீக, கிரேக்கர்களின் நிர்வாக அமைப்பே முன்மாதிரியாக இருந்தது.

- மேற்கு இந்தியாவில் இந்தோ கிரேக்க அரசாட்சிகள் தோன்றியமை மாறுபட்ட பண்பாட்டு தாக்கங்களை வலுப்படுத்தியது.
- ஒரு வேறுபட்ட தனித்தன்மை கொண்ட கலைச்சிந்தனை போக்கையும் தோற்றுவித்தது.

33. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகள்

- குப்தப் பேரரசு தேசம் அல்லது புக்தி எனப்படும் மாநிலங்களாக பிரிக்கப்பட்டது. இதன் ஆளுநர் உபாரிகா ஆவார்.
- மாநிலங்கள் விஷ்யா எனப்படும் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டன இதன் அதிகாரி விஷயபதி ஆவார்.
- மாவட்ட மட்டத்திற்கு கீழ் விதி, பூமி, பதகா, பீடா என்று பல்வேறு விதமான நிர்வாக அலகுகள் இருந்தன.
- கிராம நிர்வாகத்தை கிராமிகா, கிராம அத்யக்ஷா போன்ற அதிகாரிகள் நிர்வகித்தனர்.

34. விக்கிரமசீலா பல்கலைக்கழகம் குறித்து சிறுகுறிப்பு தருக

- பாலர் வம்சத்து ஆட்சியாளரான தர்மபாலர் விக்கிரமசீலா பல்கலைக் கழகத்தை நிறுவினார்.
- இது பௌத்த மதக் கொள்கைகளையும் , பண்பாட்டையும் போதிக்கும் சிறந்த மையமாக உருவானது.
- பண்டைய இந்தியாவில் புகழ்பெற்று விளங்கிய பௌத்த கல்வி நிறுவனங்களுன் ஒன்றாக விக்கிரமசீலா பல்கலைக் கழகம் இருந்தது.
- பீகாரின் பகல்பூர் மாவட்டத்திலிருந்த இது இஸ்லாமிய படையெடுப்பால் அழிக்கப்பட்டது.

35. குப்தர் காலத்தில் சமண இலக்கியம் வளர்ந்தது குறித்து விவரி.

- சமணர்களின் மத நூல்கள் தொடக்கத்தில் பிராகிருத மொழியில் எழுதப்பட்டன. பின்னர் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டது.
- சமண கோட்பாடுகளை பரப்ப இந்து புராணங்களும், இதிகாசங்களும் சமணமத கண்ணோட்டத்தில் எழுதப்பட்டன.
- விமலா சமண ராமாயணத்தை எழுதினார்.
- சித்தசேன திவாகரா சமணர்களிடையே தர்க்க சாஸ்திரத்திற்கு அடித்தளமிட்டார்.

36. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரி

- ஆரியபட்டர் சூரிய சித்தாந்தா எனும் நூலில் சூரிய கிரகணத்துக்கான உண்மையான காரணங்களை ஆராய்ந்தார்.
- பூமி தன் அச்சில் தானே சுற்றுகிறது என்பதை கண்டுபிடித்த முதல் வானவியலாளர் ஆரியபட்டரே.
- வானவியல், புவியியல், தாவரவியல், இயற்கை வரலாறு ஆகியன பற்றி பிருகத்சம்ஹிதை எனும் நூலில் வராக மிகிரர் குறிப்பிட்டுள்ளனர்.
- நவனிதகம் என்ற மருத்துவ நூல் நோய்களுக்கான மருந்துகள் மற்றும் மருந்துகள் தயாரிக்கும் முறையை குறிப்பிடுகிறது.

37. குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

- உள் நாட்டுப் பூசல்களும், அரச குடும்பத்தின் கருத்து வேறுபாடுகளும் அதன் வீழ்ச்சிக்கு காரணமாயின.
- ஹீனர்களின் படையெடுப்பால் நாட்டின் மீது குப்தர்களின் பிடி தளர்ந்தது.
- தக்காணத்தின் வாகாடக அரசர்கள் குப்தர்களிடமிருந்து மால்வா, மேகலா, கோசலா, மாளவம், குஜராத் போன்ற பகுதிகளை கைப்பற்றினர்.
- மாளவத்தின் யசோதர்மன் உத்திரப்பிரதேசத்தின் முகாரிகள் என சிற்றரசர்கள் பலர் உருவாயினர்.

38. ஹர்ஷர் சீனாவுடன் கொண்டிருந்த உறவு

- ஹர்ஷர் சீனாவுடன் நேசமான உறவை கொண்டிருந்தார்.
- சீனப்பயனி யுவான்சுவாங் மீது ஹர்ஷர் மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்.
- ஹர்ஷரது சமகால சீன அரசரான டாய் சுங் இரண்டு முறை ஹர்ஷரது அவைக்கு தூதுகுழுக்களை அனுப்பினார்.
- ஹர்ஷரது இறப்பிற்கு பிறகு ஆட்சியதிகாரம் தகுதியற்ற ஒருவர் கையில் இருப்பதை சீன தூதர் வருந்தினார்.

39. ஹர்ஷருடைய குற்றவியல் நீதித்துறையின் முக்கியத்துவம்

- குற்றவியல் சட்டங்கள் குப்தர்கள் காலத்தை காட்டிலும் கடுமையானதாக இருந்தது.
- குற்றவியல் சட்டங்களை விசாரித்து நீதி வழங்க மீம்சாகர்கள் நியமிக்கப்பட்டனர்.
- நாடு கடத்துவதும், உடல் உறுப்புகள் வெட்டப்படுவதும் வழக்கமான தண்டனையாக இருந்தது.
- அரசனுக்கு எதிராக சதி செய்வோர்க்கு ஆயுட்கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

40. எல்லோரா மற்றும் எலி ஃபெண்டாவின் நினைவுச் சின்னங்கள்

- எல்லோரா குடை வரைகோவில் வளாகம் பௌத்த, சமண, இந்து மத சின்னங்களுக்கான கலை நுட்பத்தைக் கொண்டுள்ளது.
- ஒரே கல்லால் செதுக்கப்பட்ட எல்லோரா கைலாசநாதர்கோவில் சிறப்பு வாய்ந்ததாக உள்ளது.
- எலிஃபண்டாவின் பிரதான கோவில் எல்லோரா கோவிலை விட சிறந்ததாகும்.
- எலிஃபண்டாவின் நடராஜர், சதாசிவம் ஆகிய சிற்பங்கள் அழகிலும், கலை நுட்பத்திலும் சிறப்பானவையாக உள்ளன.

41. ராஷ்டிரகூடர்கள் கன்னட இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு

- ராஷ்டிரகூடர்கள் ஆட்சியில் கன்னட இலக்கியம் பெரும் வளர்ச்சி கண்டது.
- முதலாம் அமோகவர்ஷர் கவிராஜ மங்கலம் எனும் கன்னட நூலை இயற்றினார்.
- ராஷ்டிரகூடர்கள் கன்னட அறிஞர்களை ஆதரித்தனர்.
- கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்களான பொன்னா, பம்பா, ரன்னா ஆகியோர் மூன்றாம் கிருஷ்ணரால் ஆதரிக்கப்பட்டனர்.

42. ராஷ்டிர கூடர்கள் சமனமதத்திற்கு அளித்த ஆதரவு

- முதலாம் அமோகவர்ஷர், நான்காம் இந்திரர், இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம் இந்திரர் போன்ற அரசர்கள் சமணத்தை ஆதரித்தனர்.
- ஜுனசேனர் சமணர்களின் ஆதிபுராணத்தை எழுதினார்.
- குணபத்ரர் சமணர்களின் மஹாபுராணத்தை எழுதினார்.
- ராஷ்டிர கூட மன்னர்களின் ஆதரவால் சமண சமயமும், இலக்கியமும் வளர்ச்சி அடைந்தன.

43. பல்லவர்களின் நிர்வாகப் பிரிவுகள்

- பல்லவர் காலத்தில் அரசப் பதவி தெய்வீக உரிமையாகவும், மரபு வழியாகவும் கருதப்பட்டது.
- அமைச்சர் குழு மந்திரி மண்டலம் என்று அழைக்கப்பட்டது.
- மாநில ஆளுநர்களுக்கு மாவட்ட அதிகாரிகள் ஆலோசனை வழங்கினர்.
- கிராமங்களில் மக்கள் பங்குபெறும் மன்றங்கள் இருந்தன.

44. எல்லோரா கைலாசநாதர் குகைக் கோயில்

- எல்லோரா குகை கோவில்கள் அவற்றின் சிற்பங்களுக்காக பெயர் பெற்றவை.

- எல்லோராவில் ஐந்து குகைகளில் சுவரோவியங்கள் காணப்படுகின்றன.
- கைகலாசர் கோவிலுள்ள சுவரோவியங்கள் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன.
- விலங்குகள், பறவைகள், மரங்கள், பூக்கள் ஆகியன நேர்த்தியாக தீட்டப்பட்டுள்ளன.

45. புகழ் பெற்ற சைவ மூவர்கள்

- திருநாவுக்கரசர் (அப்பர்) , திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகியோர் புகழ் பெற்ற சைவ மூவர் ஆவர்.
- திருமுறைகளில், தேவாரம் என்று அறியப்படும் முதல் ஏழு நூல்கள் இவர்களுடையதே.
- 1 முதல் 3 வரையிலான பாடல்களை திருஞானசம்பந்தர் எழுதினார்.
- 4 முதல் 6 வரையிலான பாடல்களை அப்பர் இயற்றினார்
- 7 வது பாடலை சுந்தரர் இயற்றினார்.

46. சாளுக்கியர் ஆட்சியில் அரச குல மகளிரின் முக்கியத்துவம்.

- அரச குடும்ப மகளிர் மாநில ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.
- விஜயபத்திரிகா எனும் இளவரசி கல்வெட்டாணைகளை பிறப்பித்தார்.
- முதலம் ஜெயசிம்மனின் வழி வந்த சாளுக்கிய வம்சாவளியின பெண்கள் அரசவையில் முக்கியத்துவம் பெற்றனர்.
- அரச நிர்வாகத்தில் நேரடியாக பங்குபெற்றனர்.

47. தமிழகத்தில் வைணவத்தை பரவலாக்கியதில் ஆழ்வார்கள் பங்கு

- ஆழ்வார்களின் வைணவப் பாடல்கள் நாலாயிர திவ்வியபிரபந்தமாக நாதமுனியால் தொகுக்கப்பட்டது.
- கண்ணனின் குழந்தை பருவத்தை மையமாக வைத்து பெரியாழ்வார் பாடல்களை இயற்றினார்.
- திருவாய்மொழி உள்ளிட்ட நான்கு நூல்களை எழுதிய நம்மாழ்வார் ஆழ்வார்களில் சிறந்தவராக கருதப்படுகிறார்.
- கண்ணன் மீதான காதலை தனது பாடல்களின் மூலமாக ஆண்டாள் வெளிப்படுத்தினார்.

48. முகமது பின் காசிமின் இராணுவ படையெடுப்புக்கான காரணம்

- ஈராக்கின் அரபு ஆளுநர் ஹஜாஜ் கடற்கொள்ளையருக்கு எதிரான நடவடிக்கை என கூறி சிந்துவை தாக்கினார்.
- தரைவழி, கடல்வழி என இரு தனித்தனி படைப்பிரிவுகளை அனுப்பினார்.
- இரண்டு படைப்பிரிவுகளும் தோற்கடிக்கப்பட்டு அதன் தளபதிகள் கொல்லப்பட்டனர்.
- எனவே ஹஜாஜ் , காலிபா அனுமதியுடன் முகமது பின் காசிம் தலைமையில் இராணுவத்தை அனுப்பி சிந்துவை கைப்பற்றினார்.

49. இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவ தாக்குதலுக்கான காரணம்

- செல்வக் களஞ்சியமாக இருந்த இந்துக் கோவில்களை கொள்ளை அடிப்பதே முதன்மை நோக்கமாகும்.
- இந்து கோவில்களை இடிப்பதும், சிலைகளை தகர்ப்பதும் அவரது நோக்கமாகும்.
- பெரும்படையை பராமரிக்கிற செலவை ஈடு செய்யும் தேவை ஏற்பட்டது.
- ஏனெனில் துருக்கியப் படை என்பது நிரந்தரமான தொழில் நேர்த்தி பெற்றதாகும்.

50. ரசியா சுல்தானா அதிகாரத்திற்கு அகற்றப்பட்டது ஏன்

- ஆண்கள் சவாரி செய்வதைப் போன்று ஆயுதங்களுடன் குதிரை சவாரி மேற்கொண்டார்.
- தனது முகத்திற்கு அவர் திரையிடவில்லை

- ஜலாலுதீன் யாகுத் என்ற அபிசீனிய அடிமையை அவர் அமீர் இ அகுர் ஆக நியமித்தார்
- அரசி ரசியாவுக்கும் அபிசீனிய அடிமைக்கும் இருந்த நெருக்கத்தை பிரபுக்கள் விரும்பவில்லை.

51. மாலிக் கபூரின் தென்னிந்திய தாக்குதல்கள்

- மேற்கு தக்காணத்திலிருந்த தேவகிரி தோற்கடிக்கப்பட்டது.
- தெலுங்காணா பகுதியிலிருந்த வாராங்கல்லின் காகதீய அரசர் பிதாப ருத்ரதேவர் தோற்கடிக்கப்பட்டார்.
- ஹொய்சாள அரசன் மூன்றாம் வீரவல்லாளன் தோற்கடிக்கப்பட்டு அவனது செல்வங்கள் கைப்பற்றப்பட்டடன.
- தமிழ்நாட்டில் சிதம்பரம், திருவரங்கம், மதுரை ஆகிய கோயில் நகரங்களை சூறையாடினார்.

52. முகமது துக்ளக்கின் சோதனை முயற்சிகள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள்

- டில்லியிலிருந்து தென்னிந்தியாவை ஆள்வது கடினம் என்று சுல்தான் கருதியதால் தலைநகரை தேவகிரிக்கு மாற்றினார்.
- தேவகிரியிலிருந்து வட இந்தியாவை ஆள்வது கடினம் என்பதால் தனது முடிவை மீண்டும் மாற்றினார்.
- வெள்ளி நாணயங்களுக்கு பதிலாக அடையாள நாணய முறையை அளிமுகப்படுத்தினார்.
- வெண்கல நாணயங்களை போலியாக அடிப்பது எளிதாக இருந்ததால் இத்திட்டம் தோல்வி அடைந்தது.
- வேளாண்மையை விரிவாக்க புதுமையான திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.
- தோவாப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான பஞ்சம் இத்திட்டத்தை தோல்வி அடையச் செய்தது.

53. இராஜராஜ சோழனின் கடல்வழி படையெடுப்புகள்

- முதலாம் ராஜராஜனின் கடல் கடந்த படையெடுப்புகள் மேற்கு கடற்கரை இலங்கை ஆகியவற்றில் வெற்றியை பெற்றுத் தந்தன.
- இந்தியப் பெருங்கடலில் மாலத்தீவுகளை கைப்பற்றினார்.
- பாண்டியருக்கு அடைக்கலம் கொடுத்த இலங்கையின் மீது படையெடுத்து வெற்றி பெற்றான்.
- இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகள் சோழ அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

54. சோழர் காலத்தில் இருந்த வணிக குழுக்களின் பங்களிப்பு

- சோழர் காலத்தில் அஞ்சு வண்ணத்தார், மணிகிராமத்தார் ஆகிய இரு வணிக குழுக்கள் இருந்தன.
- அஞ்சு வண்ணத்தார் கடல்வழி வணிகர்கள் ஆவர்.
- உள்நாட்டு வாணிபம் செய்தவர்கள் மணிகிராமத்தார் என்று அழைக்கப்பட்டனர்.
- காலப்போக்கில் இந்த இரு குழுக்களும் ஒன்றாகி ஐநூற்றுவர் திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களுடன் இயங்கினர்.

55. சோழர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள்.

- இறை, காணிகடன், இறை கட்டின காணிகடன், கடமை , குடிமை உள்ளிட்ட வரிகள் வசூலிக்கப்பட்டன.
- அரசரும், உள்ளூர் தலைவர்களும் ஒப்படி என்ற வரியை வசூலித்தனர்.
- விளை பொருளாக செலுத்தப்பட்ட வரி இறை கட்டின நெல்லு எனப்பட்டது.
- பாசன குளங்களை பழுதுபார்க்க ஏரி ஆயம் எனும் வரி வசூலிக்கப்பட்டது.

56. இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான் என அழைக்கப்படுவது ஏன்.

- முதலாம் ராஜேந்திரன் தனது கடற்படை மூலம் தென் கிழக்கு ஆசிய நாடுகளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.
- இராஜேந்திரனின் கடற்படை ஸ்ரீ விஜயத்தை கைப்பற்றியது.
- குறுநில மன்னரின் ஆட்சியின் கீழ் இருந்த கெடா (கடாரம்) ராஜேந்திரனால் கைபற்றப்பட்டது.
- கடாரம் கைப்பற்றதைத் தொடர்ந்து முதலாம் ராஜேந்திரனுக்கு கடாரம் கொண்டான் என்ற பட்டம் சூட்டப்பட்டது.

57. சோழர்கால சமூகத்தின் படிநிலையை கூறு

- பிரம்ம தேய கிழவர் என்றழைக்கப்படும் நில உடைமையாளர்கள் சமூகத்தில் உயர்நிலையில் இருந்தனர்.
- வேளாண்வகை கிராமங்களை சேர்ந்த நில உடைமையாளர்கள் இரண்டாமிடத்தில் இருந்தனர்.
- உழுகுடி என்ற குத்தகைதாரர்கள் மேற்கண்டவர்களின் நிலங்களிலும் பிராமணர்களின் நிலங்களிலும் உழுதனர்.
- சமூகப்படிநிலையில் அடிமட்டத்தில் உழைப்பாளிகளும், அடிமைகளும் இருந்தனர்.

58. சோழர் காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள்

- முதலாம் ராஜேந்திரன் தென் ஆற்காடு பகுதியில் உள்ள எண்ணாயிரத்தில் ஒரு வேதக் கல்லூரியை நிறுவினார்.
- இக்கல்லூரியில் 340 மாணவர்கள் பயின்றனர் 14 ஆசிரியர்கள் பணிபுரிந்தனர்.
- புதுச்சேரிக்கு அருகிலுள்ள திருபுவனியிலும் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள திருமுக்கூடலிலும் சமஸ்கிருத கல்லூரிகள் தொடங்கப்பட்டன.
- இந்த கல்விக் கூடங்களில் வேதங்கள் சமஸ்திருத இலக்கணம். சுமயம் தத்துவங்கள் வேதாந்தம் ஆகியன பயிற்றுவிக்கப்பட்டன.

59. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரை கோயில்கள்.

- பிள்ளையார்பட்டி , திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை , கன்னியாகுமாரி
- சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் பண்டைய பாண்டியரால் உருவாக்கப்பட்ட குடைவரை கோவில்கள் காணப்படுகின்றன.

60. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டுப் பயண வரலாற்று ஆசிரியர்களின் குறிப்பு

- மார்க்கோபோலோ, வாசஃப் , இபின்பதுாதா போன்ற பயணிகள் எழுதியுள்ள குறிப்புகள் பாண்டிய அரசு பற்றி அறிய உதவுகிறது
- வெனீசிய பயணி மார்க்கோபோலோ பாண்டியரின் நேர்மையான நிர்வாகம், உடன் கட்டை ஏறும் வழக்கம் அரசர்களின் பலதார மணமுறை வணிகர்களை சிறப்பாக நடத்தும் விதத்தை பதிவு செய்துள்ளார்
- பாண்டியர்கால குதிரை வணிகம் குறித்து வாசாஃப் பதிவு செய்துள்ளார்.
- மார்க்கோகோலோ மற்றும் அரேபிய பயணிகள் கூற்றுப்படி காயல் துறைமுகநகரமாகவும் பண்டமாற்று மையமாகவும் பாண்டியர் ஆட்சியில் இருந்துள்ளது

1. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா குறித்து விளக்குக ?

- எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய கால கட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் ஆகும்.

- ஆப்பிரிக்காவில் தோன்றி அங்கிருந்து வெளியேறிய (இடம் பெயர்ந்த) மனித இனம் ஹோமோஎரக்டஸ் ஆகும்.
- வரலாற்றுக்கு முந்தைய மனிதர்கள் இந்தியாவில் 10 இலட்சம் முதல் 20 இலட்சம் எனத் தெரிகிறது.
- எழுத்து தோன்றுவதற்கு முந்தைய காலம் கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என பிரிக்கப்படும்.
- வரலாற்றுக்கு முந்தையக் காலம் பழையகற்காலம், இடைக்கற்காலம், புதிய கற்காலம் என பிரிக்கப்படுகிறது.
- பழைய கற்காலம் கீழ் பழைய கற்காலம், இடைப்பழங்கற்காலம், மேல் பழங்கற்காலம் என பிரிக்கப்படுகிறது.
- மனிதர்கள் புதிய கற்காலக் கட்டத்தில்தான் விலங்குகளையும், தாவரங்களையும் வளர்க்க கற்றுக் கொண்டார்கள்.
- பாறைப்படிவியல் ஆய்வுகள், காலவரிசை, கற்கருவிகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இப்பண்பாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2. கருவி தொழில் நுட்பத்தில் மேல் பழங்கற்காலம் புதுமையை நிகழ்த்தியது ?

- கருவிகளுக்கான தொழில் நுட்பத்தில் புதுமையையும், மனிதர்களின் அறிவாற்றல் திறன்களில் மேம்பட்ட தன்மையை காண முடிகிறது.
- இக்காலக் கட்டத்தைச் சேர்ந்த கற்கருவிகள் கத்தி, வாள் போன்று அமைந்திருந்தன.
- வெட்டுவாய் போன்ற எலும்பால் ஆன கருவிகளும் அமைந்திருந்தன.
- சிறுகற்களில் செய்யப்பட்ட கருவிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
- கருவிகளை உருவாக்க சிலிக்கான் செறிந்த மூலப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன.
- எலும்பினாலான கருவிகளும், விலங்குகளின் எஞ்சிய பகுதிகளும் கர்நூல் குகைகளில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- கல்லில் வெட்டுக் கருவிகள் செய்யும் தொழிற்கூடங்கள் இக்காலக் கட்டத்தில் வளர்ச்சிப் பெற்றன.

3. கீழ் மற்றும் இடைப்பழங்கற்கால பண்பாடுகளை ஒப்பிடுக

<u>கீழ் பழங்கற்காலம்</u>

- இந்தியாவில் இப்பண்பாடு இரண்டு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பாக தோன்றியிருக்க வேண்டுமென கருதப்படுகிறது.
- கங்கைச் சமவெளி, தமிழ் நாட்டின் தென் பகுதி, ஹன்ஸ்கி சமவெளி, பிம் பிட்கா பகுதிகளில் இப்பண்பாடு பரவியிருந்தது.
- திறந்த வெளியிலும், ஆற்றுச் சமவெளிகளிலும், குகைகளிலும் இம்மக்கள் வசித்தனர்.
- கருவிகள் செய்ய பெரிய கற்பாளங்களையும் கூழாங்கற்களையும் தேர்ந்தெடுத்தனர்.

<u>இடைப்பழங்கற்காலம்</u>

- இந்தியாவில் இப்பண்பாடு 3,85,000 - 4,00,000க்கு இடைப்பட்டக் காலகட்டமாக கருதப்படுகிறது,
- நர்மதை, கோதாவரி, கிருஷ்ணா, யமுனை உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் இப்பண்பாடு காணப்பட்டது.
- திறந்த வெளியிலும், குகையிலும், பாறைப்படுகைகளிலும் இம்மக்கள் வசித்தனர்.
- செர்ட், ஜாஸ்பர், கால்சிடெனி, குவார்ட்ஸ் ஆகிய கற்களை கருவிகளுக்கு மூலப் பொருள்களாக பயன்படுதிதினர்.

4. தொடக்க புதிய கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்கப் பண்புகள்

- வேளாண்மை, விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகியவற்றின் தொடக்கமாக புதிய கற்காலம் அமைந்தது.
- எகிப்து, மெசபடோமியா, சிந்துப் பகுதி, கங்கைபள்ளத்தாக்கு, சீனா போன்ற நாடுகளில் இப்பண்பாட்டிற்கான சான்றுகள் காணப்படுகின்றன.
- இக்காலக்கட்டத்தில் வேளாண்மை தோன்றி பல பண்பாட்டு வளர்ச்சிகளுக்கு வழிவகுத்தது.
- தாவரங்களையும், விலங்குகளையும் வளர்த்ததன் மூலம் உற்பத்தியின் அளவும், விநியோகமும் அதிகரித்தன.
- ஆறுகளின் மூலம் படியும் செழிப்பான மண் வேளாண்மையை மேம்படுத்தி தானிய உற்பத்தியின் உபரிக்கு வழிவகுத்தது.
- பெரிய கிராமங்கள் தோன்றின. மட்பாண்டங்கள் செய்யும் தொழில் வளர்ந்தது.
- நிரந்தர இருப்பிடங்கள் கட்டப்பட்டன.
- இக்காலத்தின் பண்பாட்டு வளர்ச்சிகள் மொத்தமாக 'புதிய கற்காலப் புரட்சி' எனப்படுகின்றன.

5. காஷ்மீர் பகுதியின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா காலத்தைச் சேர்ந்தது – கூற்றை நிறுவுக

- காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலம் பண்பாடும் ஹரப்பா நாகரிகமும் ஒரே சமகாலத்தவையாகும்.
- பர்சாஹோம் இக்காலக் கட்டத்தின் முக்கியமான ஆய்வு மையமாகும்.
- குளிரிலிருந்து காத்துக் கொள்ள இம்மக்கள் 4 அடி கொண்ட குழி வீடுகளில் வசித்தனர்.
- முட்டை வடிவம் கொண்ட இவ்வீடுகள் அடிப்பகுதியில் அகலமாகவும் மேல்பகுதியில் குறுகியதாகவும் இருந்தன.
- புதிய கற்காலத்தில் செம்மறியாடு, வெள்ளாடு ஆகியன வளர்ப்பு விலங்குகளாக இருந்தன.
- பர்சாஹோமை சேர்ந்த மக்கள் ஹரப்பா மக்களோடு புதிய கற்காலத்தில் வாணிபத்தில் ஈடுபட்டனர்.
- கையால் வனைந்த மட்பாண்டங்களையும், எலும்பினாலான கருவிகளையும் பயன்படுத்தினார்கள்.
- செராமிக், செராமிக் அல்லாதது என இரு கட்டங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டுள்ளன.

6. தென்னிந்தியாவின் புதிய கற்காலப் பண்பாடு எங்கு நிலவியது ?

- ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, தமிழ் நாட்டின் வடமேற்குப் பகுதி ஆகிய இடங்களில் இப்பண்பாடு நிலவியது.
- ஒரு சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் இங்கு காணப்படுகிறது.
- புதிய கற்கால வளாகத்தின் ஒரு பகுதியாக 200 க்கும் மேற்பட்ட இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- நீராதாரங்களுடன் கூடிய கருங்கல் குன்றுகளுக்கு அருகே இக்குடியிருப்புகள் அமைந்துள்ளன.
- தென்னிந்தியாவின் புதிய கற்கால ஆய்விடங்கள் சாம்பல் மேடுகளை கொண்டுள்ளன.
- ஆந்திரப் பிரதேசத்தின் உட்னூர், கர்நாடகாவில் கொடெக்கல், குப்கல் ஆகியன இத்தகைய சாம்பல் மேடுகளை கொண்டுள்ளன.
- மெல்லிய சாம்பலும், நுண்ணுயிரிகளால் சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் இப்பகுதிகளில் காணப்படுகின்றன.
- சாம்பல் மேட்டைச் சுற்றிலும் வீடுகளும், புதைகுழிகளும், மனித வாழிடங்களுக்குச் சான்றாக உள்ளன.

7. சிந்து நாகரிகம் ஏன் ஹரப்பா நாகரிகம் என அழைக்கப்படுகிறது ?

- இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னம் சிந்து நாகரிகமாகும்.
- இந்தியாவின் வட மேற்குப் பகுதியிலும், பாகிஸ்தானிலும் தோன்றிய இந்நாகரிகமும், பண்பாடும் மொத்தமாக சிந்து நாகரிகம் எனப்படுகிறது.
- சிந்து நாகரிகடும் அதன் சமகாலப் பண்பாடுகளும் இந்தியாவிலும், பாகிஸ்தானிலுமாக மொத்தம் 1.5 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ளன.
- இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால் இரு ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.
- இந்தியத் தொல்லியல் துறையின் அளவையரான அலெக்சாண்டர் கன்னிங்காம் ஹரப்பா பகுதியிலிருந்து ஒரு முத்திரையை கண்டெடுத்தார்.
- ஹரப்பா நாகரீகத்தினை ஆய்வு செய்து அதன் முக்கியத்துவத்தையும் நாகரீக சிறப்புகளையும் சர் ஜான் மார்ஷல் வெளிக்கொணர்ந்தார்.
- உலகில் வேளாண்மையும், விலங்கு வளர்ப்பும் மிக முன்பே தொடங்கிவிட்ட பகுதிகளில் சிந்து பகுதியும் ஒன்று.
- ஹரப்பா நாகரிகத்தின் தொடக்க நிலையில் அப்பகுதி முழுவதும் கிராமங்களும், ஊர்களும் வளர்ச்சி பெற்றன.
- முதிர்ந்த ஹரப்பா பண்பாட்டுக் கட்டத்தில் நகரமையங்கள் தோன்றின.

8. திட்டமிடப் பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக ?

*<u>ஹரப்பா</u>*

- அரண்களால் பாதுகாக்கப்படும் தன்மை, நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள் கழிவு நீர் வசதி ஆகியன குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.
- ஹரப்பா மக்கள் கட்டுமானத்திற்கு சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும், கற்களையும் பயன்படுத்தினார்.
- நகரங்கள் சட்ட வடிவமைப்பை கொண்டிருந்தன, வீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களை கொண்டிருந்தன.
- வீடுகள் சுடாத செங்கற்களாலும் கழிவு நீர் வசதிகள் சுட்ட செங்கற்களாலும் கட்டப்பட்டன.

*<u>மொகஞ்சதாரோ</u>*

- மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரமாகும்.
- கோட்டைப் பகுதி, தாழ்வான பகுதி என இரு வேறுபட்ட பகுதிகளாக இரு காணப்பட்டது.
- வீடுகளில் சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலும் இருந்தன.
- மொகஞ்சதாரோவில் ஒரு கட்டிடம் சேமிப்புக் கிடங்காக அடையாளம் காணப்படுகிறது.

9. சிந்து நாகரிகத்தை மையமாக கொண்டு கீழ்க்கண்டவை குறித்து சிறு குறிப்பு வரைக

*<u>மட்பாண்டம் செய்தல்</u>*

- மட்பாண்டங்கள் அடர்சிவப்பும் கறுப்பும் கலந்த வர்ணம் பூசப்பட்டிருந்தன.
- மட்பாண்டங்கள் நன்கு சுடப்பட்டதாகவும், நுட்பமான வேலைப்படு கொண்டதாகவும் உள்ளது.
- மட்பாண்டங்களில் இலைகள், மீன் செதில், கோடுகள், வட்டங்கள், தாவரங்கள் ஆகியன ஓவியங்களாக திட்டப்பட்டுள்ளன.

*<u>வணிகமும் பரிவர்த்தனையும்</u>*

- மெசபடோமியாவுடன் நெருக்கமான தொடர்வு வைத்திருந்தனர்.
- இந்தியாவின் பிற பண்பாடுகளை சேர்ந்த மக்களோடும் வாணிப தொடர்பு வைத்திருந்தனர்.

- கார்னிலியன், வைடூரியம், செம்பு, தங்கம் என பலவகைப்பட்ட பொருட்கள் மெசபடோமியாவுக்கு ஏற்றுமதியாயின.

<u>எடைக்கற்களும், அளவீடுகளும்</u>

- வணிகப் பரிவர்த்தனைகளில் ஈடுபட்டிருந்ததால் முறையான அளவீடுகளுக்கு தேவையிருந்தது.
- எடைக்கற்கள் கன சதுர வடிவத்தில் படிகக்கல்லில் செய்யப்பட்டிருந்தன.
- ஒரு இஞ்ச் = 1.75 செ.மீ ஆகக் கொள்ளும் விதத்தில் அளவுகோல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- *<u>முத்திரைகளும் எழுத்துமுறையும்</u>*
- ஸ்ட்டைட். செம்பு, சுடுமண், தந்தம் போன்றவற்றாலான முத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

<u>எழுத்துக்கள்</u>

- ஹரப்பா எழுத்து முறையை இன்று வரை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை.
- 5000 க்கும் மேற்பட்ட எழுத்துத் தொடர்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

10. இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்ட பண்பாடுகளை பற்றி எழுதுக

- வட இந்தியாவில் செம்புக்கால பண்பாட்டுடன் தொடர்புடைய பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இம்மட்பாண்டங்களில் கருப்பு நிற ஓவியங்கள் காணப்படுகின்றன.
- இப்பண்பாட்டின் காலம் பொ.ஆ.மு 2600 முதல்- - பெ.ஆ.மு 1200 வரையாகும்
- சிந்து, கங்கைச் சமவெளிப் பகுதிகளில் காணப்படும் இப்பண்பாடு தொடக்க வேதகால பண்பாட்டோடு தொடர்புகளை கொண்டுள்ளது.
- இப்பண்பாடு தொடர்பான ஆய்விடங்களில் செம்பினாலான உருவங்களும், செம்பு பொருட்களும் கிடைப்பதால் இது செம்புப் பொருட்குவியல் பண்பாடு என்றும் அறியப்படுகிறது.
- நாட்டுப்புற வாழ்க்கையை மேற்கொண்ட இம்மக்கள், செம்மறியாடு, பசு, எருது, வெள்ளாடு, குதிரை, நாய் போன்றவற்றை வளர்த்துள்ளனர்.
- கிராமிய பண்பாடான இங்கு நெல், பார்லி, பட்டானி, காய்கள் பயிரிட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன,
- செம்பிலும், சுட்ட களிமண்ணிலும் செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தனர்.

11. தமிழ் நாட்டின் பெருங்கற்கால ஆய்விடங்கள் பற்றி விவாதி

*<u>ஆதிச்சநல்லூர்</u>*

- ஆதிச்சநல்லூர் திருநெல்வேலியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- முதுமக்கள் தாழிகள், ஆணிகள், ஆயுதங்கள், கல்மணிகள், ஒருசில தங்கநகைகள் ஆகியன இங்கு கண்டெடுக்கப்பட்டன.
- எருமை, வெள்ளாடு, செம்மறியாடு, சேவல், புலி, மிளா, யானை ஆகியவற்றின் வெண்கல பொம்மைகள் அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்டன.

*<u>பையம் பள்ளி</u>*

- பையம் பள்ளி வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவை சேர்ந்த கிராமமாகும்.
- பெருங்கற்காலத்தோடு தொடர்புடைய கருப்பு மற்றும் சிகப்பு நிற மட்பாண்டங்கள் இங்கு கண்டெடுக்கப்பட்டன.
- பெரும் எண்ணிக்கையிலான ஈமத்தாழிகளும் இங்கு கண்டெடுக்கப்பட்டன.

*<u>கொடுமணல்</u>*

- ஈரோட்டிலிருந்து 40 கி.மீ. தொவைலில் நொய்யல் ஆற்றின் வடகரையில் உள்ளது.
- ரோமானிய நாணயக்குவியல்கள் இங்கு அதிகமாக கண்டெடுக்கப்பட்டுள்ளன.

- ஈமக்குழிகள், ஈமத்தாழிகள், கற்படுகை புதைப்பு என பல வகைப்பட்ட புதைக்கும் முறைகள் கொடுமணலில் அகழ்ந்தெடுக்கப்பட்டன.

12. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் குறித்து ஒரு கட்டுரை வரைக

- வேதகால அரசியல் முறை என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும்.
- இனக்குழுக்களின் தலைவரே அனைத்து நடவடிக்கைகளின் மையமாகவும், அரசியல் தலைமையாகவும் இருந்தார்.
- அரசருடைய மிக முக்கிய பணி இனக்குழுக்களை பாதுகாப்பதாகும். அவர் சொத்துக்களை பாதுகாத்தார்.
- சபா, சமிதி. விததா. கணா என்றழைக்கப்பட்ட அமைப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
- இராணுவம், மதம் சார்ந்த பணிகளை விததா மேற்கொண்டது.
- மதகுருமார்கள் அரசருக்கு ஆலோசனை வழங்கி, ஊக்கப்படுத்தி புகழந்து அரசர்களின் செல்வாக்கைப் பெற்றனர்.
- சேனானி என்பவர் படைத்தலைவர் ஆவார்.
- நிலபரப்பை கட்டுப்படுத்திய அதிகாரி விராஜபதி ஆவார்.
- படைக்குழுக்கள் மற்றும் கிராமங்களின் தலைவராக கிராமணி செயல்பட்டார்.

13. பொ. ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் யாவை ?

- அரசுருவாக்கமும், வேத மதத்தின் கடுமையும் மக்களின் சிந்தனை மற்றும் சுதந்திரத்தை கட்டுப்படுத்தின.
- பிரதேச அடையாளங்களின் தோற்றம் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களை உந்தி தள்ளியது.
- மேட்டுக்குடி மக்கள் ஏற்கெனவே நிலவிய சமூக அமைப்பை எதிர்த்து அவர்கள் வைதீக மதங்களை நோக்கி சென்றனர்.
- வேதமதம் முழுமையாக நிறுவன மயமாகியிருக்கவில்லை. இது சமூகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவியிருக்கவில்லை.
- நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் ஆகியவற்றின் காரணமாக வணிகர்கள், சேத்கள் போன்ற புதிய வர்க்கம் உருவானது. இவர்கள் தங்கள் பொருளாதார நிலைக்கு இணையான சமூக தகுதியை கோரினர்.
- ஆஶ்ரமங்களால் பிரிக்கப்பட்ட வாழ்க்கை முறை பிராமணர்களுக்கு மட்டுமே வேதங்களில் அனுமதிக்கப்பட்டிருந்தது. முற்ற பிரிவினருக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டடது.
- மேற்கண்ட காரணங்கள் பொ.ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக் கு வித்திட்டன.

14. ஆசிவகம் குறித்து விளக்கவும், மேலும் இந்தியாவில் அதன் பரவலை குறிப்பிடவும் ?

- பௌத்த ஆவணங்களின் படி ஆசிவகம் என்ற பிரிவை தோற்றுவித்தவர் நந்தவாச்சா என்று கருதப்படுகிறது.
- கிஸா சம்கிக்கா, மக்காலிகோசலர், புராண காஸ்யபர், பகுத கச்சாயனர் ஆகியோர் ஆசிவகத்தின் முக்கிய தலைவர்களாவர்.
- ஆசிவகர்கள் நிர்வாண துறவிகள், ஊழ்வினை கோட்பாட்டை நம்பியவர்கள்.
- ஆசிவகர்களின் அடிப்படைக் கொள்கை நியதி அல்லது எல்லாமே விதி என்பதாகும்.

- இவ்வுகில் எதையுமே மாற்ற முடியாது எல்லாமே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டடது. துக்கத்தை தீர்க்க ஒருவர் பல பிறவிகளை எடுக்க வேண்டும் என்றனர்.
- ஆசிவகத்தின் படி வாழ்வில் தவிர்க்கமுடியாத ஆறு அம்சங்கள் லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம் என்பதாகும்.
- குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசிவகத்திற்கு இருந்தார்கள்.
- பௌத்தம், சமணம் ஆகியவற்றோடு ஒப்பிட்டும் போது ஆசிவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும் நாடு முழுவதும் பரவியிருந்தது

15. சமணத்தில் ஏற்பட்ட பிளவை விளக்குக

- மகாவீரரின் மறைவிற்கு 500 ஆண்டுகள் கழித்து சுமார் பொ.ஆ.மு 79- 82 ல் சமணத்தில் பிளவு ஏற்பட்டது.
- மகதம் கடும் பஞ்சத்தில் பாதிக்கப்பட்டபோது பத்ரபாகு தலைமையில் சில சமண துறவிகள் தெற்கு நோக்கி சென்று கடும் விரதம் மேற்கொண்டனர்.
- பத்ர பாகு தலைமையில் சென்றவர்கள் உடைகள் ஏதுமின்றி இருந்தனர்.
- உடைகள் ஏதுமின்றி இருந்த அவர்கள் திகம்பரர்கள் எனப்பட்டனர்.
- எஞ்சிய துறவிகள் ஸ்துலபத்திரர் தலைமையில் மகதத்திலேயே இருந்தனர்.
- இவர்கள் வெள்ளையாடை அணிந்திருந்தனர். ஸ்வேதம் பரர்கள் என்று அழைக்கப்பட்டனர்.
- இப்பிளவு மகதத்தில் சமணத்தை பலவீனப்படுத்தியது.
- குஜராத், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், ஒடிசா, கர்நாடகா ஆகிய இடங்களில் சமணம் தீவிரமாக பின்பற்றப்பட்டது.

16. புத்தரின் எண் வழிப்பாதையை விவரி (மத்திம வழி (அ) அஷ்டாங்க மார்க்கம்)

- 1. நன்னம்பிக்கை 2. நல்லார்வம் 3. நல்வாய்மை 4. நற்செயல் 5. நல்வாழ்க்கை முறை 6. நன் முயற்சி 7. நற்சிந்தனை 8. நல்ல தியானம்
- புத்தர் கடவுள் பற்றி குறிப்பிடவோ, பேசவோ இல்லை
- புத்தர் கடவுள் இருப்பை ஏற்கவும் இல்லை மறுக்கவும் இல்லை.
- பௌத்தம் சாதி முறையை ஏற்கவில்லை, சமத்துவத்தை வலியுறுத்தியது.
- அஹிம்சையை பொருத்தவரை மிதமான போக்கை கடைபிடித்தது.
- வணிகத்தையும், சிக்கனத்தையும் ஆதரித்தது.
- ஆயுதங்கள், இறைச்சி , மது, விஷம் ஆகியவற்றை விற்பனை செய்வதை அது அனுமதிக்கவில்லை.

17. இந்தியாவில் பௌத்தத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் ?

- ஹீனயானம், மகாயானம், வஜ்ரயானா, தந்திராயானா சகஜயானா என பௌத்தம் அவ்வப்போது பிளவுற்றது.
- சமஸ்கிருதம் பௌத்தத்தில் பின்பற்றப்பட்டதால் பாமர மக்களுக்கும் பௌத்தத்திற்கும் இடையே இடைவெளி உருவானது.
- ஹர்ஷவர்த்தனருக்கு பிறகு பௌத்தம் அரச ஆதரவை இழந்தது.
- பக்தி இயக்கத்தைச் சேர்ந்த ஆன்மீக வாதிகளான ராமானுஜர், ராமானந்தர் ஆகியோர் வேத மதத்தின் பெருமையை நிலை நாட்டினர்.
- ஹீனர்களின் படையெடுப்பு பௌத்தத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.
- ஹீன ஆட்சியாளர்களான தோரமாணர், மிகுரகுலர் ஆகியோர் பௌத்தர்களின் மீது ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்தனர்.
- இராஜபுத்திரர்கள் பௌத்த மதத்தினரைதுன்புறுத்துவதிலும், கொல்வதிலும் ஈடுபட்டனர்.

- அரேபிய, துருக்கிய படையெடுப்புகள் பௌத்த துறவிகளை இந்தியாவை விட்டு வெளியேற்றி திபெத், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் அடைக்கலம் தேட வைத்தன.

18. மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகள் பற்றி விளக்குக ?

- மௌரிய அரசர்கள் பற்றி பல்வேறு பௌத்த , சமண இலக்கியங்களிலும், இந்து மத இலக்கியமான பிராமணங்களிலும் குறிப்புகள் காணப்படுகிறது.
- இலங்கையில் கிடைத்த பாலி நூலான மகாவம்சம் முக்கிமான கூடுதல் ஆதாரமாகும்.
- இந்தியா பற்றிய கிரேக்க வரலாற்று அறிஞர்களின் பதிவுகள் மௌரியர் பற்றிய சான்றுகளை உறுதிப்படுத்துகின்றன.
- ஜேம்ஸ் பிரின் செப் சாஞ்சியில் உள்ள கல்வெட்டிலிருந்த பிராமி எழுத்துக்களின் பொருளை கண்டுபிடித்த பிறகுதான் மௌரியப் பேரரசு பற்றி நிறைய தகவல்கள் வெளிவந்தன.
- ருத்ரதாமனால் வெளியிடப்பட்ட ஜீனாகத் பாறை கல்வெட்டு மௌரியப் பேரரசின் எல்லைகள் பற்றி அறிய உதவுகிறது.
- விசாகதத்தர் எழுதிய முத்ரராட்சசம் எனும் நூல் மகத அரியணையில் சந்திர குப்தர் அமர்ந்ததை தெரிவிக்கிறது.
- சந்திர குப்தர் பற்றி அறிய உதவும் முக்கியமான நூல் இண்டிகா ஆகும் இதனை கிரேக்க வரலாற்றாளர்களின் நூல்களில் உள்ள மேற்கோள்கள் மூலம் அறிய முடிகிறது.
- மௌரியரின் நிர்வாகம், அரசியல் பற்றிய விரிவான பதிவுகள் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- அசோகரின் கல்வெட்டுகள் கலிங்கப் போர் பற்றியும், அவரது தர்மக் கோட்பாடுகள் பற்றியும் விளக்குகிறது.

19. மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகள் ?

- நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர் ஆவார். அமைச்சரவை, மதகுரு, மஹாமாத்திரியர்கள் ஆகியோர் அரசருக்கு நிர்வாகத்தில் உதவினர்.
- தலைநகர் பாடாலிபுத்திரம் நேரடியாக நிர்வகிக்கப்பட்டது.
- சுவர்ணகிரி, உஜ்ஜையினி, தட்சசீலம். தேசாலி என நான்கு மாகாணங்களாக நிர்வாகம் பிரிக்கப்பட்டிருந்தது.
- ஒவ்வொரு பகுதியிலும் ஒரே மாதிரியான வருவாய் மற்றும் நீதி நிர்வாகம் நிலவியது.
- மாகாணங்கள் மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் நகரங்களாகவும், நகரங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன.
- மாவட்ட நிர்வாகம் ஸ்தானிகர் என்பவர் கட்டுப்பாட்டில் இருந்தது.
- நகர நிர்வாகம் நகரகா என்பவர் கட்டுப்பாட்டில் இருந்தது.
- ஐந்து முதல் பத்து கிராமங்களுக்கு கோபா என்ற அதிபாரிகள் பொறுப்பாக இருந்தனர்.
- கிராம நிர்வாகம் கிராமணி என்பவரால் நிர்வகிக்கப்பட்டது.

20. இந்தியாவின் மீது பாரசீகர்களின் தாக்கம் குறித்து நாம் அறிவது என்ன ?

- இந்தியாவின் வடமேற்கு பகுதி பாரசீக மற்றும் இந்திய பண்பாடுகளின் சங்கமமாக மாறியது.

- பாரசீகத் தொடர்பு பண்டைய இந்தியாவின் கலை, கட்டிடக்கலை, பொருளாதாரம், நிர்வாகதிதில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இந்தியாவின் வடமேற்கு பகுதியில் கரோஷ்டி எழுத்துமுறை வளர்ச்சிப் பெற்றது.
- நாணயத்திற்கான இந்திய சொல்லான கார்சா பாரசீக மொழியிலிருந்தே வந்தது.
- பாரசீக நாணயமான சிக்லோய் மாதிரியிலான இந்திய நாணயங்கள் இந்தியா பாரசீகம் இடையேயான வாணிப தொடர்பை விளக்குகிறது.
- அசோகருடைய கல்வெட்டாணைகள் அக்கிமீனைட் அரசர் டாரியசின் கல்வெட்டுகளின் தாக்கமே ஆகும்.

- சாரநாத் தூணின் சிங்க உச்சி, ராம்பூர்வால் தூணின் மணி உச்சி ஆகியன ஆக்கிமினைட் தூண்களில் காணப்படும் உச்சிகளை ஒத்தே உள்ளன.
- பாடாலித்திரத்தின் அரண்மனை தூண்கள் மற்றும் மௌரியர் கலைகளும், கட்டிடக்கலைகளும் பாரசீக தாக்கத்துக்கான அடையாளங்களை கொண்டுள்ளன.

21. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பற்றிக் கூறுக.

- அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் மௌரியப் பேரரசு பற்றிய நம்பகத்தன்மை கொண்ட சான்றுகளாக விளங்குகின்றன.
- அசோகரால் வெளியிடப்பட்ட 14 பாறைகல்வெட்டுக்கள், 2 கலிங்க கல்வெட்டுக்கள், 7 தூண் கல்வெட்டுகள், சிறு துண் கல்வெட்டுகள் என இதுவரை மொத்தம் 33 கல்வெட்டுகள் கிடைத்துள்ளன.
- அசோகருடைய கல்வெட்டு கட்டளைகள் பெரும்பாலும் பிராமி எழுத்து முறையிலும், சில கல்வெட்டு கட்டளைகள் மகதி மற்றும் பிராகிருதத்திலும் அமைந்துள்ளன.
- காந்தகார் பிரகடணங்கள் கிரேக்கம் மற்றும் அராமிக்கிலும், பாகிஸ்தானில் கல்வெட்டு கட்டளைகள் கரோஷ்டி எழுத்திலும் உள்ளன.
- அரசு அதிகாரிகள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டு தர்மத்தை போதிக்க வேண்டுமென 3 வது பாறைக் கல்வெட்டு கூறுகிறது.
- காரணமின்றி யாரையும் சிறை படுத்தவோ, துன்புறுத்தவோ கூடாது என அசோகர் தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதை முதலாவது கலிங்க பாறை கல்வெட்டு கூறுகிறது.
- அனைத்து மதங்களும் அமைதி நிலவ ஒத்துழைக்க வேண்டும் என்றும் எல்லா துறவிகளுக்கும் மரியாதை தரப்பட வேண்டுமென்றும் ஆறாவது பாறை கல்வெட்டு கூறுகிறது.
- விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் மருத்துவ வசதி ஏற்படுத்தி கொடுத்ததை இரண்டாவது பாறைக் கல்வெட்டு கூறுகிறது.

22. களப்பிரர்கள் என்போர் யார் ? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வது என்ன ?

- சங்க காலத்திற்கும், பல்லவர், பாண்டியர் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம் எனப்படுகிறது.
- களப்பிரர்கள் போர் குணம் மிக்கவர்கள் ஆவர். இவர்கள் தமிழகத்தின் மூவேந்தர்களையும் வீழ்த்தி தமிழகத்தை கைப்பற்றினர்.
- தமிழக வரலாற்றில் இக்காலக் கட்டம் இடைக்கால ஆட்சி என்றும், இருண்டக்காலம் என்றும் சித்தரிக்கப்பட்டது.
- தமிழ் இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை இக்காலக் கட்டத்தில் இயற்றப்பட்டவையே.
- அவைதீக மதங்களான சமணமும், பௌத்தமும் களப்பிரர்கள் ஆட்சியில் செல்வாக்கு பெற்றன.

- சிவகங்கை மாவட்டம் பூலாங்குறிச்சியில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு பெ.ஆ ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்த சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களைப் பற்றி குறிப்பிடுகிறது.
- இந்த அரசர்கள் பற்றி எந்த குறிப்பும் இல்லாததால் இவர்கள் களப்பிர அரசர்களாக இருக்கலாம் என கருதப்படுகிறது.
- பொ. ஆ. ஆறாம் நூற்றாண்டின் 3 வது கால் பகுதியில் பாண்டியர்களால் களப்பிரர் ஆட்சி முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

**23.** சங்க கால அரசியல் முறையானது அரசு உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைமையுரிமையே ஆகும். இக்கூற்றை ஆதரித்தோ எதிர்த்தோ காரணங்களை வழங்கு ?

| <u>குடிமை தலைமை முறையை சார்ந்த கருத்து</u> | <u>குடிமைத் தலைமை முறை அல்ல கட்டமைக்கப்பட்ட அரசே</u> |
|---|---|
| சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை | மருத நிலப்பகுதி வாழ் சமூகத்தில் வேற்றுமைகள் இருந்ததை சங்க இலக்கியங்கள் மூலம் அறியலாம். |
| எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படவில்லை | மூவேந்தர்கள் தங்கள் நிலத்தின் மீது கொண்டிருந்த செல்வாக்கை கிரேக்க ரோமானிய சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. |
| அரசின் உருவாக்கத்திற்கு தேவைப்படும் வேளாண் வளர்ச்சியும், உபரியும் போர்களால் தடுக்கப்பட்டன. | ஆட்சிப்பகுதிகளை விரிவுபடுத்தவே போர்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை புறத்திணை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. |
| வட இந்திய அரசுகளைப் போல வரி விதிப்பு இருந்ததாக சான்றுகள் இல்லை | வணிகப் பெருவழிகளிலும், காவிரிபூம் பட்டினம், முசிறி போன்ற துறைமுகங்களிலும் வரி வசூலிக்கப்பட்டுள்ளன. |

**24.** மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாக கட்டமைப்பை விவரிக்கவும் ?

- இரும்புக் காலகட்டத்தில் தோன்றிய தலைவர்களிலிருந்து தொடக்க வரலாற்று கால வேந்தர்கள் உருவாயினர்.
- தலைவர்களில் ஒரு சிலர் மேய்ச்சல் நிலங்களின் மீதும், வேளாண் நிலங்களின் மீதும் தங்கள் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதன் மூலம் வேந்தர் என்ற நிலையை அடைந்தனர்.
- கிழார்களையும், வேளிர் குலத் தலைவர்களையும் வேந்தர்கள் அடி பணிய செய்ததோடு தங்களுக்குள்ளும் போரிட்டுக் கொண்டனர்.
- போருக்காக படை வீரர்களை அணி திரட்டியதோடு, சில வேளிர் குலத் தலைவர்களின் உதவியையும் பெற்றனர்.
- சங்க காலத்தைச் சேர்ந்த வேந்தர்கள் தங்களது வலிமையை பறை சாற்றிக் கொள்வதற்காக சிறப்புப் பட்டங்களை சூட்டிக் கொண்டனர்.
- கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப் பெயர்களை சூட்டிக் கொண்டு ஏனைய வேளிர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் கொண்டனர்.
- புலவர்களையும், கலைஞர்களையும் ஆதரித்து அவர்களை அரசவையிலும் மூவேந்தர்கள் வைத்துக் கொண்டனர்.
- தங்களையும், தங்கள் நாட்டையும் புகழ்ந்து பாடுவதற்காக புலவர்கள் வேந்தர்களால் ஆதரிக்கப்பட்டனர் என கருதப்படுகிறது.

25. சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தை சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் பற்றி விளக்குக ?

- தொலைதூர நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் தமிழகத்தில் தங்கியிருந்து வாணிபத்தில் ஈடுபட்டுள்ளனர்.
- மகத கைவினைஞர்கள், மாளவ உலோக பணியாளர்கள், மராத்திய எந்திர பொறியாளர்கள் பற்றி மணிமேகலை குறிப்பிடுகிறது.
- தமிழ் பிராமி கல்வெட்டுகளில் வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் காணப்படுகின்றன.
- உப்பு வணிகர்கள் உமணர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் மாட்டு வண்டிகளில் குடும்பத்தோடு வணிக நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
- சாத்து எனும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களை குறிக்கிறது.
- ரோமப் பேரரசு, தென்கிழக்கு ஆசிய நாடுகள் போன்ற தொலைதூரத்தில் அமைந்துள்ள நாடுகளோடும் வாணிபம் நடைபெற்றதை தொல் பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.
- தென்னிந்திய கடற்கரைகள் கிழக்கையும், மேற்கையும் இணைக்கும் கடல் வழிப் பாதையில் அமைந்திருந்ததால் கடல் கடந்த வாணிபம் சிறப்பாக நடைபெற்றது.
- பண்டைய தமிழக துறைமுகங்களில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய அம்போரா ஜாடி, கண்ணாடிப் பொருட்கள் கடல் கடந்த வாணிபத்தை சுட்டுகிறது.

26. மேற்கு இந்தியாவில் இந்தோ கிரேக்க அரசர்களின் எழுச்சி, வணிக, பண்பாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்தியது விவரி ?

- அலெக்சாண்டர் வடமேற்கு இந்தியாவின் மீது படையெடுத்து பஞ்சாப் பகுதியை கைப்பற்றியதிலிருந்து கிரேக்கர்களுடனான இந்திய தொடர்பு தொடங்கியது.
- இந்தியாவிலிருந்து மேற்கே எகிப்து வரையில் முறையான வாணிபம் நடந்தது.
- வடமேற்கு ஆப்கானிஸ்தான் வழியாக தரைவழி வாணிபமும், பாரசீ வளைகுடா, செங்கடல் வழியே கடல் வாணிபமும் நடைபெற்றது.
- தந்தம், ஆமை ஓடுகள், முத்துக்கள் , அவுரி, விளாமிச்சை வேர் தைலம் அரிய மரங்கள் ஆகியன இந்தியலிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டன.
- கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம் பாடாலிபுத்திரத்திலுள்ள நினைவுச் சின்னங்களிலிருந்து தெரிய வருகிறது.
- மௌரியப் பேரரசின் நிர்வாக அமைப்புக்கு கிரேக்கர்களுடைய நிர்வாக அமைப்பும் ஒரு தூண்டுகோலாய் இருந்திருக்கலாம் என சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர்.
- மேற்கு இந்தியாவில் இந்தோ கிரேக்க அரசாட்சிகள் தோன்றியது இந்தியாவில் பண்பாட்டு, கலைச் சிந்தனைகளில் ஒரு மாற்றத்தையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியது.

27. கலைக்கும் இலக்கியத்திற்கும் கனிஷ்கர் ஆற்றிய பங்களிப்பு

- மகாயன பௌத்தம் தோன்றியதன் விளைவாக புத்த மதத்திலும் சிலை வடிப்பது அனுமதிக்கப்பட்டது. இது காந்தாரக் கலைக்கு வித்திட்டது.
- இந்தோ கிரேக்க பாணியில் சிற்பங்களும், கலையும் தோன்றுவதற்கு இது வழிவகுத்தது.
- தட்சசீலத்திலும், வடமேற்கு பகுதிகளிலும் செதுக்கப்பட்ட புத்தரின் சிலைகள் கிரேக்க மரபால் ஊக்கம் பெற்று கண்ணியமான ஆடைகளில் அவரை காட்டுகின்றன.
- அஜந்தா குகைகள் முதல் மும்பையில் கன்ஹேரி குகைகள் வரை பௌத்தர்கள் பாறைகளை குடைந்து சைத்தியங்களையும், விகாரங்களையும் அமைத்தனர்.
- மகாயான மரபின் ஒரு பகுதியாக இந்த குகைகளில் புத்தரின் பெரிய அளவு சிலைகள் வடிக்கப்பட்டன.

- நாகார்ஜுனர், அஸ்வகோஷர், பார்ஸவர், வசுமித்திரர் போன்றோரை கனிஷ்பர் ஆதரித்தார்.
- அஸ்வகோஷர் புத்தசரிதம் எனும் நூலையும் சரிபுத்ரப்ரகரண எனும் சமஸ்கிருத நாடகத்தையும் இயற்றினார்.
- இந்து மத நூல்களான மனுஸ்மிருதி, வாத்சயாயனரின் காமசூத்திரம், அர்த்தசாஸ்திரம் ஆகியன இக்காலக் கட்டத்தில்தான் இறுதி வடிவம் பெற்றன.
- மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதத்தை விவரி

28. பொ. ஆ. மு கடைசி நூற்றாண்டின் முடிவில் கிரேக்க அரசுகளை அகற்றி விட்டு மத்திய தரைக்கடல் உலகின் வல்லரசாக ரோம் மேலெழுந்தது.

- ரோமானியக் குடியரசு பொ.ஆ.மு 27 ல் பேரரசர் அகஸ்டசின் கீழ் ஒரு பேரரசு ஆயிற்று.
- ஐரோப்பாவிலும், வட ஆப்பிரிக்கவிலும் பெற்ற வெற்றிகள் மூலம் குவித்திருந்த பெரும் செல்வங்களை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ரோம் செல்வ செழிப்பு நகரமாகியது.
- ரோமின் செல்வ செழிப்பு இந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து நறுமணப் பொருள்கள், துணிகள் தேவையை அதிகரித்து வணிக விரிவாக்கத்தை ஏற்படுத்தியது.
- பொ.ஆ. முதல் நூற்றாண்டில், எகிப்திய கடலோடி ஹிப்பாலஸ் என்பவர் அரபிக்கடலில் வீசும் பருவகாற்றுகளின் காலமுறை இயல்புகளை கண்டறிந்தார்.
- ரோமாணிய கப்பல்கள் இந்தியாவின் மேற்கு கடற்கரைக்கு இதனால் நேரடியாக பயணிக்கத் தொடங்கின.
- ரோமானியர்களின் அதிகரித்த தேவையும், இந்தியாவிற்கான நேரடி கடல் வழி திறப்பும் இந்தியாவிற்கு வரும் வணிக கப்பல்களின் எண்ணிக்கையை அதிகரித்தது.
- ஆண்டொன்றுக்கு இருபது கப்பல்கள் என்பதிலிருந்து ஏறக்குறைய அன்றாடம் ஒரு கப்பல் என்ற அளவிற்கு வாணிபம் அதிகரித்தது.

29. பொ.ஆ. 1 ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள்

- வடக்கே பேரரசுகள் தழைத்தோங்கியதற்கு மாறாக, தமிழ் பகுதியில் அரசியல் நிலப்பரப்பு சிற்றரசுகளாக துண்டுபட்டிருந்தது.
- மதுரையை தலைநகராக கொண்ட பாண்டியர், உறையூரைத் தலைநகராக கொண்ட சோழர், வஞ்சியை தலைநகராக கொண்ட சேரர் என மூவேந்தர்களால் தமிழ் பகுதி ஆளப்பட்டது.
- பொ. ஆ மு 3 ம் நூற்றாண்டிலேயே மௌரியர்கள் தமிழ் மூவேந்தர்களை அறிந்திருந்தனர்.
- அசோகரின் இரண்டாவது பாறை கல்வெட்டாணை மூவேந்தர்களை தனது பேரரசின் எல்லையிலிருந்த அரசர்கள் என குறிப்பிடுகிறது.
- தமிழ் பகுதியில் மூவேந்ர்களுடன் , போர்பிரபுக்களும், வேளிர்களும் அக்காலக் கட்டத்தில் அரசியல் களத்தில் இருந்தனர்.
- பொ. ஆ. மு மூன்றாம் நூற்றாண்டிலிருந்து பொ. ஆ. மு மூன்றாம் நூற்றாண்டு வரையிலான தமிழ் பகுதி அரசுகள் பற்றி சங்க இலக்கியங்கள் வாயிலாக ஓரளவு நாம் அறியமுடிகிறது.
- நாட்டின் வட பகுதியில் நிகழ்ந்து வந்த அரசியல் மாற்றங்களால் தென்னிந்தியா, குறிப்பாக தமிழ் நாடு(பகுதி) பாதிக்கப்படாமல் இருந்தது .

30. குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம், நிலக்குத்தகை முறைகள்.

<u>நிலவகைகள்</u>

- 1. ஷேத்ரா - பயிரிடக் கூடிய நிலம்
- 2. கிலா - தரிசு நிலம்
- 3. அப்ரஹதா - காடு அல்லது தரிசு நிலம்

- 4. வாஸ்தி - குடியிருக்க தகுந்த நிலம்
- 5. கபட சஹாரா - மேய்ச்சல் நிலம்

நில குத்தகை முறைகள்

- 1. நிவிதர்மா - அறக்கட்டளைப் போன்ற இந்த நிலமானியம் வடக்கு, மத்திய இந்தியா, வங்கத்தில் நிலவியது.
- 2. நிவிதர்மா அக்சயனா - நிரந்தரமான அறக்கட்டளை - இதிலிருந்து வரும் வருவாயை பயன்படுத்திக் கொள்ளலாம்
- 3. அப்ரதா தர்மா - வருவாயை பயன்படுத்தலாம், ஆனால் இதை பிறருக்கு தானம் செய்யமுடியாது. நிர்வாக உரிமையும் இல்லை.
- 4. பூமிசித்ராயனா - தரிசு நிலத்தை முதன் முதலாக சாகுபடி நிலமாக மாற்றுபவருக்கு தரப்படும் உரிமை - நிலத்திற்கு குத்தகையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

31. குப்தர் காலத்து வணிக குழுக்களின் பங்கை ஆய்வு செய்க ?

- குப்தர் பொருளாதாரத்தின் வலிமைக்கு வணிகர்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.
- ஓரே இடத்தில் தங்கி வணிகம் செய்து செல்வம் சேர்த்த வணிகர்கள் சிரேஷ்டி எனப்பட்டார்.
- இலாபத்திற்காக ஊர் ஊராக சென்று வாணிபம் செய்தவர் சார்த்தவஹர் எனப்பட்டார்.
- பொருள்களின் உற்பத்தி, அதிகரிப்பு, வணிக விரிவாக்கம் ஆகியவற்றில் வணிக குழுக்களின் பங்கு சிறப்பாக இருந்தது.
- வணிக குழுக்களில் கைவினைஞர்களுக்கான குழுக்கள், வங்கியாளர்களுக்கான குழுக்கள், வணிகர்களுக்கான குழுக்கள் ஆகியோரின் உறுப்பினர்களை கொண்ட குழும அமைப்புகள் இயங்கின.
- பயணிகளின் நலன்களுக்காக நிழற்குடை, சத்திரங்கள், விடுதிகள், கோயில்கள், தோட்டங்கள், மண்டபங்கள் போன்றவற்றை வணிக குழுக்கள் ஏற்படுத்தி தந்தன.
- வணிக குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதாக கல்வெட்டுகள் மூலம் அறியடுடிகிறது.
- நாரதஸ்மிருதி, பிருகஸ்பதி ஸ்மிருதி ஆகியவை வணிக குழுக்களின் அமைப்பு, செயல்பாடு குறித்து விவரிக்கின்றன.

32. பௌத்தமதத்திற்கு பாலர்கள் ஆற்றிய பங்களிப்பு ?

- பாலர்வம்சத்து அரசர்கள் பௌத்த மதத்தின் மகாயான பிரிவை ஆதரித்தனர்.
- பௌத்த தத்துவஞானியான ஹரிபத்ரர் தர்மபாலருக்கு ஆன்மீக குருவாவார்.
- தர்மபாலர் பீகாரின் பகல் பூர் மாவட்டத்தில் விக்ரமசீலா எனும் பௌத்த மடாலயத்தை நிறுவினார்.
- சோமபுரியில் பெரிய பௌத்த விகாரம் ஒன்றும் தர்ம பாலரால் உருவாக்கப்பட்டது.
- பீகாரின் ஓடாண்டபுரியில் பௌத்த மடாலயத்தை கட்டிய தர்மபாலர் ஹரிஷ்பத்ரர் என்ற பௌத்த மத எழுத்தாளரையும் ஆதரித்தார்.
- நாளந்தாவில் கட்டப்பட்ட பௌத்த மடாலயத்தை பராமரிப்பதற்காக ஐந்து கிராமங்களை தேவ பாலர் கொடையாக வழங்கினார்.
- தேவபாலர் ஆட்சி காலத்தில் நாளந்தா பௌத்த மதக் கொள்கைகளை போதிக்கும் முதன்மையான மையமாக தழைத்தோங்கியது.
- விக்ரமசீலா நாளந்தா பல்கலைக்கழகங்களுக்கு பாலர்கள் அளித்த ஆதரவு பௌத்த இலக்கியங்களின் வளர்ச்சிக்கு வழிவகுத்தது.
- பாலர்களின் பங்களிப்பால் வங்காளம் பௌத்த மடாலயங்களின் இருப்பிடங்களுல் ஒன்றாக விளங்கியது.

33. குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம் விவாதிக்கவும் ?

- குப்தப் பேரரசு ஒரு பெரும் சக்தியாக உருவாகி துணைக்கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றினைத்தது.
- வலிமையான குப்த அரசின் ஆதிக்கத்தின் கீழ் பல அரசுகள் வந்தன.
- செயல்திறன் மிக்க வணிகக்குழுக்கள், கடல் கடந்த வாணிபம் மூலம் பொருளாதாரம் எழுச்சிக் கண்டது.
-
- நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது.
- உயர்வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை உச்சத்தில் இருந்தது.
- கல்வி, கலை, அறிவியல் ஆகியவை சிறந்தோங்கி இருந்தன.
- மேற்கண்ட காரணங்களை முன்வைத்து குப்தர்கள் காலம் பொற்காலம் என்ற வாதம் முன் வைக்கப்படுகிறது.
- குப்தர்கள் காலத்தில் நிலபிரபுத்துவம் காரணமாக மக்கள் துன்புற்றனர். பெண்கள் நிலையும் தாழ்வாக இருந்தது.
- எனவே குப்தர்கள் காலம் பொற்காலம் என கூறுவதை விட பண்பாட்டு மலர்ச்சியின் காலம் என்பதே சால சிறந்ததாகும்.

34. ஹர்ஷரின் வட இந்திய படையெடுப்புகள் குறித்து விவரி ?

- சிற்றரசுகளின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவற்றை தம் பேரரசோடு இணைத்துக் கொண்டார்.
- மாளவ மன்னன் தேவகுப்தனை கொன்று அப்பகுதியை இணைத்துக் கொண்டார்.
- வங்காளத்தை ஆண்ட கௌட அரசன் சசாங்கன் முறியடிக்கப்பட்டனர்.
- வல்லபியை ஆண்ட மைத்ரகர்களும் முறியடிக்கப்பட்டனர்.
- புரோச் பகுதியின் கூர்ஜரர்களை ஹர்ஷர் தோற்கடித்தார்.
- ஹர்ஷரது ஆட்சிப் பகுதி ஜலந்தர், காஷ்மீர், நேபாளம், வல்லபி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது.
- கங்கை – யமுனை நதிகளுக்குட்பட்ட பகுதிகள் அவரது கட்டுப்பாட்டில் இருந்தன.

35. ஹர்ஷரின் சமயக் கொள்கை பற்றி விளக்கம் தருக ?

- ஹர்ஷர் தொடக்கத்தில் சிவ வழிபாடு செய்பவராகவே இருந்துள்ளார்.
- ராஜ்யஸ்ரீயும், யுவான் சுவாங்கும் அவரை பௌத்த மதத்திற்கு மாற்றினர்.
- மகாயன பௌத்தத்தை ஹர்ஷர் பின்பற்றினார்.
- அனைத்து மதங்களையும் ஆதரித்த ஹர்ஷர் அம்மதங்களின் சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்தார்.
- கன்னோசியில் முதலாவது பௌத்த மதக் கூட்டத்தை ஹர்ஷர் கூட்டினார்.
- இம்மாநாட்டில் பௌத்தம், சமணம், வேதம் கற்ற பல மாநிலங்களை சேர்ந்த அறிஞர்கள் கலந்து கொண்டனர்.
- இரண்டாம் மாநாடு பிரயாகையில் நடைபெற்றது. இதில் தான் சேகரித்த செல்வத்தை அனைவருக்கும் ஹர்ஷர் பகிர்ந்தளித்தார்.
- ஹர்ஷர் மக்களுக்கு முழுமையான வழிபாட்டு சுதந்திரத்தை வழங்கினார் என்று யுவான் சுவாங் குறிப்பிட்டுள்ளார்.

36. வட இந்தியாவின் நிலை குறித்து யுவான் சுவாங்கின் கருத்துக்கள் ?

- இந்து சமூகத்தில் சாதி அமைப்பு நன்றாக வேரூன்றியிருந்தது என குறிப்பிட்டுள்ளார்

- சாதி அமைப்பு இறுக்கமாக காணப்பட்ட போதிலும் சமுதாயத்தில் மோதல்கள் ஏதும் நிகழவில்லை என பதிவு செய்துள்ளார்.
- பெண்கள் முகத்திரை அணிந்தனர், மேலும் சதி வழக்கமும் நடைமுறையில் இருந்தது.
- மக்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். ஆண், பெண் இருபாலரும் அணிகலன்கள் அணிந்தனர்.
- மரக்கறி உணவுப் பழக்கத்தை மக்கள் பின்பற்றியதாக கூறுகிறார்.
- சர்க்கரை, நெய், பால் , அரிசி போன்றவை அன்றாட வழக்கத்தில் இருந்த உணவுப் பொருள்களாகும்.
- யுவான்சுவாங் கூற்றுப்படி ஹர்ஷப்பேரரசு சீனாவைப் போன்றே எண்ணற்ற கிராமங்களையும், சிறுநகரங்களையும் கொண்டிருந்தது.
- பெரும் சத்திரங்கள், பொது கட்டிடங்கள், பௌத்தமடாலயங்கள் ஆகியன பெரிதாகவும், அடுக்குமாடி கட்டிடங்களாகவும் இருந்தன.

**37.** இராஷ்டிர கூடர்களின் சிறப்புகள் யாவை ?

- ராஷ்டிரகூடர்கள் இந்தியச் சிற்பக் கலைக்கு வியத்தகு பங்களிப்பைச் செய்துள்ளனர்.
- எல்லோரா, எலிஃபண்டா குடைவரைச் கோவில்கள் அவர்கள் காலத்தில் உருவானதாகும்.
- எல்லோரா குடைவரைக் கோவில் பௌத்த, சமண, இந்து மதச் சின்னங்களின் கலை நுட்பத்தைக் கொண்டுள்ளது.
- கன்னட சமஸ்கிருத இலக்கியங்கள் பெரும் வளர்ச்சிக் கண்டன.
- எல்லோரா சிவன்கோவிலை முதலாம் கிருஷ்ணர் கட்டினார். இது ஒரே பாறையில் உருவாக்கப்பட்டதாகும்.
- முதலாம் அமோகவர்ஷர் கவிராஜமங்கலாம் எனும் கன்னட நூலை இயற்றினார்.
- ராஷ்டிரகூடர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு மதத்தினரிடையே மத நல்லிணக்கம் நிலவியது.

**38.** பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவம் ?

- அரசர் அதிகாரிகளுக்கு வருவாய் மானியங்களையும், பிராமணர்களுக்கு நில மானியங்களையும் வழங்கினார்.
- பிராமணர்களுக்கு வழங்கப்பட்ட நிலக் கொடை பிரம்மதேயம் எனப்பட்டது.
- பிரம்மதேய கிராமங்கள் ஒரு பிராமணருக்கோ அல்லது சில பிராமணர்களை கொண்ட குழுவிற்கோ வழங்கப்பட்டது.
- பிம்மதேயங்கள் வரி செலுத்த வேண்டியதில்லை. எனவே அவை செழிப்பாக இருந்தன.
- கோவில்களுக்கு கொடையாக வழங்பப்பட்ட நிலங்கள் தேவதான கிராமங்கள் ஆகும்.
- தேவதான கிராமங்களின் வருவாயை கோவில் நிர்வாகிகள் பெற்றனர்.
- கோவில்கள் கிராமம் சார்ந்த வாழ்க்கையின் மையமாக மாறிய போது தேவதான கிராமங்கள் தனி முக்கியத்துவம் பெற்றன.

**39.** பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகளை விவரி ?

- தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகத்தில் பல்லவர் ஈடுபட்டிருந்தனர்.
- மேற்கு கடற்கரையில் மேலை நாடுகளுடனான வாணிபத்தில் அரேபிய வணிகர்கள் முன்னிலை வகித்தனர்.
- மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது.

- வெளிநாட்டு வணிகத்தில் நறுமணப் பொருட்கள், பருத்தி ஆடைகள், விலை உயர்ந்த கற்கள், மூலிகைகள் இடம் பெற்றன.
- ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, மியான்மர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
- மேலை நாடுகளுடனான வாணிபத் தொடர்பு அரேபியாவின் வழியே நடைபெற்றது.
- மாமல்லபுரத்திலும், நாகப்பட்டினத்திலும் கப்பல் தளங்களை கட்டினர்.

40. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகள் ?

- மாமல்லபுரம் கடற்கரைக் கோவில்கள் ராஜசிம்மன் ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும்.
- இக்கோவில் மூன்று கருவறைகளைக் கொண்டது. இவற்றுள் சிவன், விஷ்னு கடவுள்களின் கருவறை முக்கியமானதாகும்.
- விஷ்னுவின் கருவறையின் வெளிப்பக்கச் சுவரும், சுற்றுச் சுவரின் வெளிப்பக்கமும் விரிவான சிற்பங்களை கொண்டுள்ளது.
- ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் மாமல்லபுர கோவில்களின் சிறப்பு பண்பாகும்
- இங்குள்ள ஒற்றைக் கல் ரதங்கள் பஞ்சபாண்டவர் ரதம் என அறியப்படுகின்றன.
- பஞ்சபாண்டவர் ரதங்களில் மிக நேர்த்தியானது தர்மராஜா ரதமாகும்.
- பீம ரதம் செவ்வக வடிவ அடித்தளத்தைக் கொண்டுள்ளது.
- மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்டுள்ள கலை வெளிப்பட்டில் மிக முக்கியமானது கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கி வரும் காட்சியாகும்.

41. கஜினி மாமூதுடைய கொள்ளைத் தாக்குதல்கள் மத ஆதிக்கம் என்பதைக் காட்டிலும் அதிகம் அரசியல், பொருளாதாரத் தன்மை கொண்டவை விவாதிக்கவும் ?

- செல்வ களஞ்சியமாக இருந்த இத்துக் கோவில்களில் கொள்ளை அடிப்பதே கஜினி மாமூதின் முதன்மை நோக்கம்.
- கஜினி மாமூதின் கொள்ளைகளை அரசியல், பொருளாதார நோக்கம் மட்டுமே என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.
- இடைக்கால இந்தியாவில் கோவில்களை இடிப்பது பேரரசின் ஏகபோக அதிகாரத்தின் வெளிப்பாடாகவே இருந்தது.
- கஜினி மாமூது தனது பெரும் படையை பராமரிக்கும் செலவை ஈடுகட்டவே கொள்ளை அடித்தார் என கூறப்படுகிறது.
- துருக்கியப்படை என்பது நிரந்தரமான தொழில் நேர்த்திப் பெற்ற படையாகும்.
- இந்தியா, ஈரானிலிருந்து அடிக்கப்பட்ட கொள்ளையிலிருந்தே இவர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.
- வரலாற்றறிஞர் ரோமிலாதாப்பர் கஜினி மாமூதுவின் தாக்குதல்களை பொருளாதார மற்றும் மத உருவ எதிர்ப்பு தன்மை மட்டுமே கொண்டது என்கிறார்.

42. இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்பு முனையாக அமைந்தது எவ்வாறு ?

- 1191-ல் நடைபெற்ற முதல் ரெய்ன் போரில் முகமது கோரி தோற்கடிக்கப்பட்டார்.
- 1192-ல் முகமது கோரி மீண்டும் இரண்டாவது முறையாக அஜ்மீர் மீது படையெடுத்தார்.
- கோரியின் ஆற்றலை குறைத்து மதிப்பிட்ட பிருதிவிராஜ் சௌகான் அமைச்சர் சோமேஸ்வராவின் ஆலோசனையை நிராகரித்தார்.
- கோரிக்கு எதிராக ஒரு சிறிய படைகுழுவிற்கு தலைமையேற்று சென்றார்.

- 1192-ல் நடைபெற்ற இரண்டாம் தரெய்ன் போரில் முகமது கோரி பிருதிவிராஜ் சௌகானை தோற்கடித்தார்.
- போரில் வெற்றி பெற்ற கோரி ராஜதுரோக குற்றம் சாட்டி பிருதிவிராஜ் சௌகானை கொன்றார்.
- இந்திய வரலாற்றின் திருப்பு முனைகளுள் ஒன்றாக இப்போர் அமைந்தது. மேலும் இந்தியாவில் சுல்தானியம் அமைய இது வழிவகுத்தது.
- இந்தியாவில் தான் வென்ற பகுதிகளை முகமது கோரி தனது தளபதி குத்புதீன் ஐபெக் வசம் ஒப்படைத்து அவரை ஆட்சியாளராக்கினார்.

43. கஜினி மாமூதுவையும், கோரி முகமதுவைவும் ஒப்பிட்டும், வேறுபடுத்தியும் காட்டுக.

| | |
|---|---|
| கஜினி மாமூது துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர் ஆவார் | கோரி முகமது துருக்கிய இனத்தைச் சேர்ந்தவர் ஆவார் |
| கஜினி மாமூது இந்தியாவில் உள்ள செல்வங்களை கொள்ளையடிப்பதை நோக்கமாக கொண்டார் | கோரி முகமது இந்தியாவில் ஒரு வலிமையான இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்த விரும்பினார் |
| கஜினி மாமூது இந்தியாவில் தான் மேற்கொண்ட அனைத்துப் போர்களிலும் வெற்றி பெற்றார் | கோரி முகமது முதல் தரெய்ன் போரிலும், குஜராத் போரிலும் தோல்வியடைந்தார் |
| கஜினி மாமூதுவின் படை நிரந்தரமான தொழில் நேர்த்தி பெற்ற படையாகும் | கோரி முகமதுவின் ராணுவத்தில் பெரும்பாலும் கூலிப்படை வீரர்கள் இருந்தனர் |

44. அலா-உத்– தின் கில்ஜியின் பொருளாதார சீர்திருத்தங்களை விவாதி ?

- உழவர்களிடமிருந்து நிலவரிகள் நேரடியாக வசூலிக்கப்பட்டன.
- அலாவுன் விதித்த வரிச்சுமைகள் ஏழைகள் மீது அல்லாமல் செல்வந்தர்கள் மீதே இருந்தது.
- படைவீரர்களுக்கு ஊதியத்தை பணமாக வழங்கிய முதல் சுல்தான் இவரே.
- படைவீரர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்கியதால் விலைவாசியை கட்டுப்படுத்துவது அவசியமாயிற்று.
- கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களை சேகரிப்பதற்கு விரிவான ஒற்றர் முறையை ஏற்படுத்தினார்.
- விலை ஒழுங்கு முறை விதிகளை மீறுவோர் கடுமையாக தண்டிக்கப்பட்டனர்.
- ஏதேனும் எடைகுறைவு கண்டுபிடிக்கப்பட்டால் விற்பவரின் உடலிலிருந்து அதற்கு சமமான எடையுள்ள சதை வெட்டி எடுக்கப்பட்டது.

45. பெரோஸ் துக்ளக்கின் ஆட்சியை மதிப்பிடுக ?

- பிரபுக்கள் வகுப்பினரிடமும், மதத் தலைவர்களிடமும் பெரோஸ்துக்ளக் சமரசக் கொள்கையை கடைபிடித்தார்.
- வருவாய் நிர்வாகத்தை ஒழுங்கு செய்கிற போது பல வரிகளை குறைத்தார்.
- அடிமைகளின் நலத்துறை மூலம் அவர்களுக்கு கைவினைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு அரசாங்க தொழிற் கூடத்தில் அவர்கள் பணியமர்த்தப்பட்டனர்.
- பெரோஸ் ஆட்சியில் இரண்டு மங்கோலிய படையெடுப்புகள் நடைபெற்றன. அவை இரண்டுமே முறியடிக்கப்பட்டன.
- இஸ்லாமியர் அல்லாதோர் மீது ஜிசியா எனும் வரியை விதித்தார்.
- பல கல்வி நிறுவனங்களையும், மசூதிகளையும், அரண்மனை, கோட்டைகளையும் கட்டினார்.

- சட்லெஜ் மற்றும் யமுனை நதிகளில் கால்வாய்களை வெட்டி பாசன வசதியை ஏற்படுத்தினார்.

46. தில்லி சுல்தானியத்தின் நிர்வாக அமைப்பு குறித்து விவரம் தருக ?

- சுல்தானிய அரசு முறையானதோர் இசுலாமிய அரசாக கருதப்பட்டது.
- இராணுவத்தின் தலைமை தளபதி எனும் அதிகாரம் சுல்தானிடம் இருந்தது.
- நீதி நிர்வாகத் தலைவர் என்ற முறையில் மேல்முறையீட்டு உச்ச நீதிமன்றமும் சுல்தானே ஆவார்.
- இக்தா உரிமையாளர்களான வாலிஸ் என்பவர் வரி வசூலித்தார்.
- காலிசா எனப்படும் சுல்தான் கட்டுப்பாட்டிலிருந்த நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் மூலம் அரசு அதிகாரிகளுக்கு ஊதியம் வழங்கப்பட்டது.
- வேறுபட்ட மக்கள் தொகையை முக்தி எனும் மாகாண ஆளநர்கள் மூலமாக சுல்தான் கட்டுப்படுத்தினார்.
- உற்பத்திப் பொருளில் பாதி என்ற அடிப்படையில் நிலவரி கடுமையாக வசூலிக்கப்பட்டது.
- பரம்பரையாக வரிவசூலித்து வந்த சௌத்ரிகள் மற்றும் கிராமத் தலைவர் ஆகியோரின் நிதித் தேவைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

47. பின்வருவன குறித்து சிறு குறிப்பு வரைக ?

<u>ஊரார்</u> ஊரின் பிரதிநிதிகளான நில உடமையாளர்களே ஊரார் என்று அழைக்கப்பட்டனர்

கோவில்களின் நிர்வாகத்தையும், குளங்களின் பராமரிப்பையும் இவர்கள் மேற்கொண்டனர்

<u>சபையார்</u> பிரம்ம தேய குடியிருப்புகளை பராமரிக்கும் பணியை சபையார் மேற்கொண்டனர்.

கோயில் நிலங்களுடன் இணைக்கப்பட்டிருந்த பாசனக் குளங்களின் பராமரிப்புக்கு பொறுப்பாக இவர்கள் இருந்தனர்.

<u>நகரத்தார்</u> நகரத்தின் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் நகரத்தார் எனப்பட்டனர்.
நகரத்தாரின் நிதியுதவி கோவில்களுக்கு தேவைப்பட்டது.

<u>நாட்டார்</u> வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் நாட்டார் எனப்பட்டது.
சோழ அரச கட்டமைப்பின் அடிப்படை உறுப்புகளாக நாட்டார் செயல்பட்டனர்.

48. சோழர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழி வகுத்தன ஆராய்க

- சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் ஈட்டும் அரசாக இருந்ததால் நீராதாரங்களை நிர்வகிப்பதில் கவனம் செலுத்தினர்.
- மழை நீரை சேமித்து வைக்க வடி, வாய்க்கால் என்ற கால்வாய்கள் இருந்தன.
- வடி என்பது வடக்கு தெற்காக நீர் ஓடுவதையும், வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக நீர் ஓடுவதையும் குறிக்கிறது.
- ஏரிகள் மற்றும் கிணறுகளில் பாசனத்திற்காக நீர் சேமிக்கப்பட்டது.
- கால்வாய்களை ஆழப்படுத்துதல், அகலப்படுத்துதல், பாசன அமைப்பை பழுது பார்த்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.
- பாசன குளங்களை பழுது பார்த்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.
- பாசன குளங்களை பழுது பார்க்க ஏரி ஆயம் என்ற வரி கிராம சபையால் வசூலிக்கப்பட்டது.
- நில அளவீடு செய்ய குழி, மா, வெளி, பட்டி, பாடகம் முதலிய அலகுகள் வழக்கில் இருந்தன.

49. சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகளை எழுதுக ?

- தஞ்சை பெரிய கோவில் கட்டடக் கலை, ஓவியம், சிற்பம், சிலை வடித்தல் போன்ற கலைகளுக்கு சிறந்த சான்றாக உள்ளது.
- இக்கோவிலின் கருவறை மீது அமைக்கப்பட்ட விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது.
- கோவிலின் வெளிச்சுவர்களில் லட்சுமி, விஷ்ணு, அர்த்த நாரீஸ்வரர் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

- முதலாம் ராஜேந்திரன் தஞ்சை பெரிய கோவில் போன்றே கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு கோயிலை கட்டினார்.
- இக்கோவில் கருவறையின் வெளிப்புறச் சுவர் மாடங்களில் துர்கா, விஷ்ணு, சிவன் அர்த்தநாரீஸ்வரர் ஆகியோர் சிலைகள் இடம் பெற்றுள்ளன.
- இரண்டாம் இராஜராஜனால் கட்டப்பட்ட தாராசுரம் கோவில் சோழர் கால கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம் ஆகும்.
- இக்கோவிலின் கருவறைச்சுவரின் தளத்தில் பெரிய புராண நிகழ்வுகள் குறுஞ்சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

50. சோழர் ஆட்சியில் நிலவிய சமூக, சமய, பண்பாட்டுச் சூழலை பதிவு செய்க

- நிலம் வைத்திருப்பது சமூக மதிப்பையும், அதிகாரப்படி நிலையையும் நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரணியாக இருந்தது.
- பிரம்ம தேய குடியிருப்புகளில் ' பிரம்ம தேய கிழவர் ' எனும் நில உடமையாளர்கள் உயர் நிலையில் இருந்தனர்.
- சமூகப்படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண் வகை கிராமங்களைச் சேர்ந்த நில உடைமையாளர்கள் இடம் பெற்றனர்.
- மேற்கண்டவர்களின் நிலங்களில் ' உழுகுடி ' என்ற குத்தகைதாரர்கள் வேளாண் வேலைகளை மேற்கொண்டனர்.
- சிவன், விஷ்ணு போன்ற கடவுள்களுக்காக அதிக எண்ணிக்கையில் புதிய கோயில்கள் கட்டப்பட்டன.
- லிங்கோத்பவர் என்ற குறியீட்டு வடிவத்திலும் நடராஜர் என்ற மனித வடிவத்திலும் சிலை வழிபாடு நடைபெற்றது.
- சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோவில்களே பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்களாக விளங்கின.

51. கோயில் ஒரு சமூக நிறுவனம் இக்கூற்றை நிறுவுக ?

- சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்களுக்கான ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின.
- சமூகம், அரசியல், பொருளாதாரம், பண்பாடு நடவடிக்கைகளுக்கான மையங்களாக விளங்கின.
- கோயில்களில் பாடப்பட்ட வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்ததாக கூறப்படுகிறது.
- கோயில் அதிகாரிகள் கல்வி, நடனம், இசை, ஓவியம், நாடகம் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவித்தனர்.
- மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டவர்கள் கோயில்களில் இருந்த அணையா விளக்குகளை பராமரிக்க கால்நடைகளை கொடைகளாக வழங்கினர்.
- கடன் வழங்குதல், நன்கொடை பெறுதல், வழங்குதல் போன்ற செயல்கள் மூலம் கோயில்கள் வங்கிகளாகவும் செயல்பட்டன.

- வேதம், இசை, கலைகள் ஆகியவற்றில் பயிற்சி அளித்ததால் கோயில் ஒரு கல்வி நிறுவனமாகவும் விளங்கியது.

52. பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும், வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சியை கூறுக ?

- அரபு வணிகர்களுக்கு துறைமுகக் கட்டணங்கள், சுங்கவரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.
- நிகமத்தார், நானாதேவி, திசை ஆயிரத்து ஐநூற்றுவர், மணி கிராமத்தார், பதினென் விஷயத்தார் என்று வணிகர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.
- மிளகு, முத்து, விலை உயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியன வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டன.
- பதிமூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் குதிரை வணிகம் விறுவிறுப்பாக நடைபெற்றது.
- குதிரை வணிகம் செய்வோர் குதிரை செட்டி எனப்பட்டனர் இவர்கள் கடல்வழி வாணிபத்திலும் ஈடுபட்டனர்.
- பாண்டியர் காலத்தில் காயல் பட்டினம் மிக முக்கியமான துறைமுகமான விளங்கியது.
- வணிகத்தில் பரிமாற்றத்திற்காக தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.
- சீரான கால இடைவெளியில் தவளம் எனப்பட்ட பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன.

53. பாசனத்தை மேம்படுத்த பாண்டியர் எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

- திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்ற பெயர்களில் புதிய ஏரிகள் வெட்டப்பட்டன.
- வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டு பாசன குளங்களுக்கு நீர் கொண்டு செல்லப்பட்டது.
- சேந்தன் மாறன் காலக்கட்டத்தில் வைகை ஆற்றில் ஒரு மதகு கட்டப்பட்டது.
- ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் வெட்டிய ஒரு பெரிய ஏரி இன்றும் பயன்பாட்டில் உள்ளது.
- ஏரிகளின் கரைகளை அமைக்கும் போது கரை மட்டத்தை சமமாக பராமரிக்க நூல் பயன்படுத்தினர்.
- கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குகளை பயன்படுத்தினர்.
- பாசன நீர் நிலைகளின் பராமரிப்பு பணிகள் பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டன.
- வணிகர்களும் சில சமயங்களில் பாசன ஏரிகளை வெட்டினர்.

54. சோழர் , பாண்டியர் காலக் கட்டடக் கலையின் ஒற்றுமை, வேற்றுமைகளை ஆய்க ?

| சோழர் கால கலை, கட்டிடக்கலை | பாண்டியர்கள் கால கலை, கட்டிடக்கலை |
|---|---|
| சோழர்கள் தமது காலத்தில் அதிக எண்ணிக்கையில் கோயில் கட்டினர் | இடைக்காலப் பாண்டியரும், பிற்காலப் பாண்டியரும் புதிய கோவில்களை பட்டவில்லை மண்டபங்களையும் புதிய கோபுரங்களையும் கட்டினர் |
| தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம், தாராசரம் போன்ற கட்டுமானக் கோவில்களை கட்டினர் | கல்லறைக் கோயில்கள், குடைவரைக் கோயில்கள், கட்டமைப்புக் கோயில்களை கட்டினர் |
| சோழ அரசர்கள் தீவிர சைவர்களாக இருந்ததால் பெரும்பாலும் சிவனுக்கு கோவில்கள் எழுப்பப்பட்டன | சிவன், விஷ்ணு , பிரம்மன், கணேசன் சூரியன், கொற்றவை போன்ற கடவுள்களுக்கு கோவில்கள் எழுப்பப்பட்டன |
| சோழர் கோவில்கள் பெரும்பாலும் | பாண்டியர்களின் கோவில் எளிமையாகவும், |

| | |
|---|---|
| பிரம்மாண்டமானதாக கட்டப்பட்டது | சிறியதாகவும் கட்டப்பட்டது |
| சோழர்கள் காலத்தில் இந்து கடவுளுக்கு அடுத்தப்படியாக பௌத்த மடாலயங்கள் எழுப்பப்பட்டன (நாகப்பட்டினம்) | ஆணைமலை, கழுகுமலை ஆகிய இடங்களில் சமண குகை கோயில்கள் கட்டப்பட்டன |

+